# கம்போடிய தலைநகருள் வியட்காங் படையெடுப்பு


Registered as a NewsPaper in Ceylon  விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 12
இதழ்: 49
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

யாழ்ப்பாணம் பங்குனி 18 முஹர்றம் 22 செவ்வாய்க்கிழமை [31-3-70]



புதுவருடப்பிறப்பை முன்னிட்டு
யுனிக் - நாஷனல்
றேடியோக்கள்
விலை வெகுவாகக்
குறைக்கப்பட்டுள்ளன.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


## புதிய அரசுக்கெதிராக மக்களும் ஆர்ப்பாட்டம்

நாம்பென், மார்ச். 30

கம்போடியாவில் பதட்ட நிலை உருவாகியுள்ளது, பதவி நீக்கஞ் செய்யப்பட்ட இளவரசர் சிகானுவை ஆதரிக்கும் வியட்கொங் படையினர் அரசாங்க விரோதசக்திகளின் உதவியுடன், தலைநகருக்கு 30 மைல் தூரம் ஊடுருவிச் சென்றுவிட்டனர், 82 மணித்தியால போராட்டத்தின் பின் இவர்கள் தலைநகருக்குள் 30 மைல்வரை சென்றுவிட்டதாக கம்போடியா அரசாங்கம் தெரிவித்தது.

தலைநகரான நாம்பனில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது, நகர் எல்லையில் பலத்த பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன' வியட்கொங் படையினர் 6 மாகாணங்களில் நிலை கொண்டுள்ளனர்,

இளவரசர் சிகானுவிடம் நாட்டை திரும்பவும் ஒப்படைக்கும்படி வியட்கொங் படை வற்புறுத்துகிறது, தற்போதைய கம்போடிய அரசாங்கம் தனது நடுநிலைமைக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு உதவி செய்யும்படி சோவியத் யூனியனையும் பிரிட்டனையும் அவசர அவசரமாக கேட்டுக்கொண்டிருக்கிறது.

முன்னாள் இளவரசர் சிகானு தற்போது சீனாவில் தங்கியிருப்பதும் தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக கொரில்லா யுத்தம் நடத்தும்படியும் ஆயுத உதவிகள் வழங்கத் தாம் தயாராயிருப்பதாகவும் அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## சோவியத் தூதுவர்கள் கடத்தப்பட்டனர்

புவனர்ஸ்அயர்ஸ், மார்ச் 30

ஆஜன்டீனாவில் இன்று இரண்டு சோவியத் தூதுவர்கள் கடத்தப்பட்டனர். ஆயுதந் தாங்கிய 5 பேர் இவர்களைக் கடத்தியபோது பொலிஸார் எடுத்த பெரும் முயற்சியினால் மீட்கப்பட்டனர்.

இருவரையும் கடத்திச் செல்லும்போது பொலிஸார் துப்பாக்கியால் காருக்குச் சுட்டபோது ஒருவர் காரிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்டார். மற்றொருவர், பொலிஸார் தமது வாகனத்தைக் கடத்தல் காருடன் மோதவிட்டதன் மூலம் மீட்கப்பட்டார். தூதுவர்கள் இருவரும் காயமடைந்துள்ளனர். இது வலதுசாரியினரின் திட்டமிட்ட செயலென மேற்படி தூதராலயம் தெரிவித்துள்ளது.

## தொகுதிகள் தோறும் தினமும் பிரசாரகூட்டங்கள் நடைபெறும்

### தமிழரசு - தமிழ்க்காங்கிரஸ் கட்சிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

**வடபகுதியிலுள்ள தொகுதிகள் தோறும் தினமும் பிரசாரக்கூட்டங்களை நடாத்த தமிழரசுக்கட்சி ஏற்பாடுகள் செய்துவருகிறது. ஏப்ரல் முதலாம் திகதி முதல் தினமும் பிரசாரக்கூட்டங்கள் நடைபெறும் முதலாவது பிரசாரக் கூட்டம் நாளை வவனியாவில் ஆரம்பமாகும்.**

நியமனப்பத்திரங்களைதாக்கல் செய்யும் தினமான் ஏப்ரல் 23-ம் திகதி வரை ஊர் வலங்களையும் பிரசாரக்கூட்டங்களையும் நடாத்த தமிழரசுக்கட்சிக் கிளைகள் ஒழுங்கு செய்துவருகின்றன. இதே சமயம் மாதர் முன்னணி வாலிப முன்னணிகிளைகள் வீட்டுக்கு வீடு சென்று

#### தமிழ்க்காங்கிரஸ்

தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக்கூட்டங்கள தொகுதிகள தோறும் நடைபெற்றுவருகின்றன. தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுவருகிறதென்றும், விரைவில் வெளியிடப்படுமென்றும் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்...

இடதுசாரிக் கட்சிகளும் வடபகுதியில் பிரசாரவேலையில் ஈடுபட்டுவருகின்றன. காங்கேசன்துறைத்தொகுதியில் ஈழத்தமிழர் விடுதலை முன்னணிசார்பில் போட்டியிடவிருக்கும் திரு. வி. சுந்தரலிங்கம் வீடுக்கு வீடு சென்று ஆதரவுதிரட்டிவருகின்றார்.

## "கூட்டுறவு இயக்கம் கோவிலுக்குச் சமம்"

### கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாவில் உதவி ஆணையாளர்

சங்கானை, திங்கள்

'கூட்டுறவு இயக்கம் சிறப்புற இயங்குகின்றதென்றால் அந்தக் கூட்டுறவு இயக்கத்தின் நிர்வாகம் கண்ணியமான முறையில் இயங்குகின்றதென்பதுதான் அதன் பொருள். அதற்கு எடுத்துக்காட்டாக இன்று வெள்ளி விழாக் கொண்டாடும் சங்கானை கிழக்கு மத்திய பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் விளங்குகின்றது பொதுமக்கள் இவ்வியக்கங்களில் கூடிய சிரத்தை எடுத்துத் திறம்பட இயங்க ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். இதனால் கிராமமும் நாடும் முன்னணியில் நிற்...

சமாதான நீதவான் திரு. ஏ. ஈ இரத்தினசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் பட்டின சபைத் தலைவர் திரு எஸ். கே. திருச்சிற்றம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஐ. நா. சபை வெள்ளி விழாக் கொண்டாடும் நேரத்தில் நாம் வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். அன்பு நிறைந்த, புனிதமான இவ்விழா கூட்டுறவு இயக்கத் வளர்ச்சியின் பெருவிழாவாக அமைகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நாம் உழைக்க வேண்டும்.

## மகாவலி பூர்த்தியானதும் வேலையில்லாப் பிரச்னை இருக்காது

—சி. பி. டி.

கண்டி, திங்கள்

மகாவலித் திட்டம்பூர்த்தியாகிச் செயல்பட ஆரம்பித்ததும் நாட்டில் வேலையில்லாப் பிரச்னை என்ற பெயருக்கே இடம்இருக்க மாட்டாது என உறுதியாக நான் கூறுவேன்.'

கண்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி. பி. டி. சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில்1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபொழுது வேலையில்லாப் பிரச்னை உணவுப் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்சினைகளை அது எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வந்து ஓரளவுக்கு தீர்த்துள்ளது.

மகாவலி திட்டம் பற்றியும் அதற்காக உலகவங்கியிடம் பெறும் கடன் பற்றியும் பொய்ப் பிரசாரங்கள் செய்கின்றனர் ...

அரசாங்கத்தினரும் உலக வங்கியிடம் கடன் கேட்டதை மறந்துவிட்டார்களா? அவர்களது பொய்ப் பிரசாரத்தை உணர்ந்த மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று கூறினார்.

## கடையுடன் மோதி புரண்ட லொறி

கைதடி, திங்கள்

வீதியால் வேகமாக வந்து கொண்டிருந்த லொறி ஒன்று கடையொன்றில் மோதி குடைசாய்ந்தது. கைதடிச் சந்தியில் நடைபெற்ற இவ்விபத்தில் கடை ஓரத்தில் நின்ற வாலிபர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார் சைக்கிள் ஒன்று பலத்த சேதமடைந்தது.

சோடாப் போத்தல்களை ஏற்றிவந்த லொறியேவிபத்துக்குள்ளானது. போத்தல்கள் நொருங்கியதால்பலத்த ...

## இடமாற்றம்

கைதடி, திங்கள்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உதவிப்பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு ஜெயசூரியா நல்லூர் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். முல்லைத்தீவில் கடமையாற்றிய திரு தர்மதாசா இவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்,

## குருபூசை

சுழிபுரம், திங்கள்

கீரிமலைக் குழந்தைவேல் சமாதியில் வழக்கம்போல் சிவன்முத்தர்கள் கடையிற் சுவாமிகள், பரமகுருசுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், ஆகியோர்களின் குருபூசைகள் முறையே சித்திரை மாதம் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. விழாவுக்கான ஏற்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலங்களையும் பிரசாரக்கூட் டங்களையும் நடாத்த தமிழரசுக்கட்சிக் கிளைகள் ஒழுங்கு செய்துவருகின்றன. இதே சமயம் மாதர் முன்னணி வாலிப முன்னணிகிளைகள் வீட்டுக்கு வீடு சென்று ஆதரவு திரட்டுவதில் ஈடுபடுவார்களென்றும் தெரிய வருகிறது.

...தோறும் நடைபெற்றுவருகின்றன. தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படடுவருகிறதென்றும், விரைவில் வெளியிடப்படுமென்றும் தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறைத்தொகுதியில் ஈழத்தமிழர் விடுதலை முன்னணிசார்பில் போட்டியிடவிருக்கும் திரு. வி. சுந்தரலிங்கம் வீடடுக்கு வீடு சென்று ஆதரவுதிரட்டிவருகின்றார்

...வருகின்றது பொதுமக்கள் இவ்வியக்கங்களில் கூடிய சிரத்தை எடுத்துத் திறம்பட இயங்க ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். இதனால் கிராமமும் நா... முன்னணியில் நிற்கும்' கூட்டுறவு இயக்கம் ...காவிலுக்குச் சமமானது. ஆதலால் அதைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு நாட்டு மக்கள் ஒவ்வொருவரிடமும் உண்டு.

இவ்வாறு சங்கானை அரசடி வயிரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற சங்கானை கிழக்கு மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்துப் பேசிய உதவிக் கூட்டுறவு ஆக்கஆணையாளர் திரு. வி. கனகசபை குறிப்பிட்டார்.

...அடைகின்றோம். ...நிறைந்த, புனிதமான இவ்விழா கூட்டுறவு இயக்கத் வளர்ச்சியின் பெருவிழாவாக அமைகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நாம் உழைக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடும் நாமும் முன்னேற்றப்பாதையில் திகழ முடியும்.

விவசாயிகள், பொதுமக்கள் பயனடையக்கூடிய கூட்டுறவுச் சட்டங்களை ஆக்க மேலதிகாரிகள் அக்கறை செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஏழைமக்களின் வாழ்வில் கூட்டுறவு இயக்கம் பயனளிக்கக்கூடிய ஒன்ருகத் திகழும்.

நல்லூர் நகைச்சுவை நாடக மன்றத்தாரின் 'தம்பி கொழும்பிலை' என்னும் நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது.

...கொண்டு வந்து ஒளவுநகு தீர்த்துள்ளது.

மகாவலி திட்டம் பற்றியும் அதற்காக உலகவங்கியிடம் பெறும் கடன் பற்றியும் பொய்ப் பிரசாரங்கள் செய்கின்றனர். நாங்கள் மாத்திரம் உலகவங்கியிடம் கடன்பெறவில்லை. கூட்டணி

...சேதமடைந்தது.

சோடாப் போத்தல்களை ஏற்றிவந்த லொறியேவிபத்துக்குள்ளானது. போத்தல்கள் நொருங்கியதால்பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது,

...கள், குழந்தைவேல் சுவாமிகள், ஆகியோர்களின் குருபூசைகள் முறையேசித்திரை மாதம் 3-ம், 4-ம், 5-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. விழாவுக்கான ஏற்பாடுகளை முதலியார் வ. மகேசன் ஜே. பி. கவனித்து வருகின்ருர்.

# 'சமயகலாச்சாரத்தை உள்ளடக்கி புதிய பாடத்திட்டம் ஆக்கவும்'

## பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் கல்வி அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்த வருடம் ஜனவரி முதல் அமுல் நடத்தப்படவிருக்கும் ஜி ஸி ஈ உயர்தர வகுப்புக்கான இந்து கலாச்சாரப் புதிய பாடத்திட்டத்தை ஆட்சேபித்து பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் கல்வி மந்திரிக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளது

இந்து கலாச்சாரம் என்ற போர்வையில் முற்றும் புதிய ஒரு பாடத்திட்டத்தைக் கல்விப் பகுதியினர் மறைமுகமாகப் புகுத்துவதாக இம்மகஜரில் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய பாடத்திட்டத்தில் சித்தாந்தப் பகுதி முற்ருக நீக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக திருவருட்பயன் போன்றவை நீக்கப்பட்டுள்ளதாகவும், வேதாந்தமே பிரதான இடம்பெற்றுள்ளதாகவும், புதிய பாடத்திட்டத்தில் ஆறுமுகநாவலரும் இடம்பெறவேண்டுமென்றும், இயன்றவரை புதிய பாடத்திட்டம் எமது சமய கலாச்சாரத்தை உள்ளடக்கி கூடியவரை பழைய பாடத்திட்டத்தையொத்து அமைய வேண்டுமென்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

அம்மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

'இலங்கையிலுள்ள இந்து மக்களால் கடைப்பிடிக்கப்படும் இந்து தத்துவங்கள், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புக்களைப் பழைய பாடத்திட்டம் கொண்டுள்ளது. புதிய பாடத்தில் இச்சிறப்பியலபுகள் காணப்படவில்லை. நாயன்மார்களின் பாசுரங்கள் உட்படச் சைவர்களின் புனித நூல்களிலே பெரும் பகுதி நீக்கப்பட்டுவிட்டது. புகழ் மிக்க ஆறுமுகநாவலர் உட்பட சைவ சமயத்திற்குப் புத்துயிரளித்த சான்ருேர்களை புதிய பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனல் வங்காளம், குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த மத அரசியல் தலைவர்கள சிலர் இதில் இடம்பெற்றுளளனர்

இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் இந்துசமயம், தத்துவம், கலாச்சாரம் ஆகியவற்றின் முக்கிய அம்சங்கள புதிய பாடத்திட்டத்திலும் இடம்பெறவேண்டும்.

எனவே புதிய பாடத்திட்டத்தை நீக்கிவிட்டு எமது சைவ பண்பாட்டின் முக்கிய அம்சங்களைக் கொண்டுளள ஒரு பாடத்திட்டத்தை அமைக்கும்படி கல்விஅமைச்சரை வேண்டுகிருேம்'

## இசைவிழா ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், திங்கள்

அளவெட்டி இசைக்கலை மன்ற ஆதரவில் அடுத்த மாதம் நடத்தப்படவிருந்த இசைவிழா ஆகஸ்ட் மாதத்தில ஒத்திவைக்கப்படடுள்ளது

மேற்படி மன்றம் வருடாவருடம் நடாத்தும் இவ்விழாவில் வழமைபோல் சிறந்த கலைஞர்களை கௌரவிப்பதுபோல் இம்முறையுமகலைஞரைகௌரவிக்கவிருந்தது.

கௌரவிக்கப்படவிருந்த கலைஞர்கள் வெளிநாடுசென்றுள்ளதால் மேற்படிவிழா ஆகஸ்ட்மாதத்தில்நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் பஸ்சாரதி கொலை வழக்கு

## சந்தேகநபர் மூவரும் இன்று ஆஜர்செய்யப்படுவர்

யாழ்ப்பாணம், செவ்

கொடிகாமம் பஸ் சாரதி கொலை சம்பந்தமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்கள் மூவரும் இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜ செய்யப்படுவார்கள்.

சந்தேக நபர்களான தம்பிமுத்து கணேசமூர்த்தி, சின்னத்தம்பி திரவியநாயகம், முருகேசு கணேசமூர்த்தி ஆகிய மூன்றுபேரும் இன்று கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

கொடிகாமப் பகுதியில் ஆயுதம் தாங்கிய பொலிசார் ரோந்துசுற்றி வருகின்றனர்.

சரசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டுவரும் சந்தேகநபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லையென பொலிசார் தெரிவித்தனர்.

சரசாலை, கைதடிப் பகுதிகளிலும் பொலிசார் ரோந்து சுற்றி வருகின்றனர்.

"எனது வழியில்

## இளைஞர் திரண்டால் உரிமை பெறுவது உறுதி"

— சி. சுந்தரலிங்கம்

மாவிட்டபுரம்; திங்கள

"அநேகமாக எங்கும் எல்லாம் சிங்களமயமாகிவிட்டன அடுக்குத் தமிழும் பண்டிதப் பேச்சும் எமக்கு வேண்டியதில்லை. வேண்டுவது எமது உரிமைகள. எமக்கே உரித்தான உரிமைகளைப் பெற வழி வீரப் போராட்டமேயாகும். இளைஞர்கள ஒன்றுதிரண்டு என் வழிவருவார்களே யானல் வெற்றி நிச்சயம்"

இவ்வாறு மாவிட்டபுரத்தில் நடைபெற்ற ஈழத் தமிழ் ...ன சுதந்திர முன்னணியின் வாலிபமுன்னணியின் அமைப்புக் கூட்டத்தில் உரையாற்றிய திரு சி. சுந்தரலிங்கம் கூறினர்

மாவை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ து ஷண்முகநாதக் குருக்கள் பேசுகையில் 'சத்தியாக்கிரகத்தின் போது யாழ்ப்பாணத்திற்கு பட்டாளம் வருகிறதென்பதை யுணர்ந்ததமிழரசார் கவலையீனமாக இருந்தபடியால் அப்பாவி மக்கள இராணுவத்தால் தாக்கப்பட்டனர். இப்படி தந்திரமாக தமிழ்மக்களை ஏமாற்றி நூதனமான இரகசிய ஒப்பந்தங்கள மூலம் தத்தம் இஷ்டசித்திகளைப் பெற்றவர்கள காங்கேசன்துறைத் தொகுதியில் திரு சுந்தரலிங்கத்தைத் தோற்கடிக்க கம்யூனிஸ்டகட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள

## "இந்து ஸ்தாபன நன்கொடைச் சொத்து சட்டம் இயற்றுக"

### இந்து மாமன்றம் வற்புறுத்தல்

கொழும்பு, திங்கள்

"பொது இந்துசமய நிலையங்களினதும், நன்கொடைச் சொத்துக்களினதும், தர்ம சொத்துக்களினதும் பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் அவைகளினது நோக்கங்களை முன்னேறச் செய்வதற்கும் ஒரு "பொது இந்து ஸ்தாபன நன்கொடைச் சொத்துச் சட்டம்" ஒன்றைச் செயற்படுத்துவது நன்மை பயக்குவது மட்டுமல்ல, அவசியமானதுமாகும்."

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை இந்துமாமன்ற 15-ம் ஆண்டு நிறைவு மகாசபைக் கூட்டத்தில் நியாயதுரந்தரர் திரு. ஸி. இரங்கநாதன் கியூ. ஸி. கொண்டு வந்த மேற்கண்ட பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு இரங்கநாதன் கியூ. ஸி. மேற்கண்ட பிரேரணையைப் பிரேரித்துப் பேசுகையில் கூறியதாவது:

"எமது முன்னேர் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு கருங்கல்லினல் கோவில்கள் கட்டியெழுப்பினுர்கள். சமயத்தை முறைப்படி அநுஷ்டிக்க வழி செய்து, இந்து ஸ்தாபனங்களுக்கு சொத்துக்களையும் வழங்கினுர்கள். இச்சொத்துக்கள் தகுந்த முறையில் பாதுகாக்கப்படாமல் சீரழிவதையிட்டு சைவ மக்கள கவலை கொளகின்றனர்.

1917ல் சேர் அன்ரன் பேட்ரம் சமர்ப்பித்த ஒரு மசோதா மூலம் இதுவரை காலமும் தர்ம சொத்துக்கள பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆனல் இச்சட்டத்தில் போதிய பாதுகாப்பில்லை

1949-ம்ஆண்டில் பாராளுமன்ற உபகுழுவொன்று காலஞ்சென்ற திரு. கே. கனகரத்தினம் தலைமையில் கூடி அறநிலையப் பாதுகாப்புச் சட்டமியற்றவேண்டியகாரணங்களை ஆராய்ந்து அறிக்கைச் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் அறநிலையப் பாதுகாப்பு, ஆலயப்பிரவேசம், மிருகபலி ஆகிய விடயங்களுக்கு முக்கியமளிக்கப்பட்டன. ஆலயப்பிரவேசம், மிருகபலி போன்றவைகளுக்கு பலத்த எதிர்ப்பு இருந்தபடியால் சட்டமியற்றப்படவில்லை.

இன்று பல தர்ம சொத்துக்கள் சிலரின் சொந்தச் சொத்தாக மாறுவதும், சில நிர்வாக சீர்கேடுகளால் அழிவதையும் காண்கிருேம். இதைத் தடுக்கத் தகுந்த சட்டமியற்றப்படவேண்டுமென்ருர்.

இப்பிரேரணையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக திருவாளர் ஸி. இரங்கநாதன் கியூ. ஸி., வீ. கே. கந்தசாமி, என் கிருஷ்ணதாசன் (இளைப்பாறிய மாவட்ட நீதிபதிகள), ஆ செ நடராசா (நியாயதுரந்தரர்), கோ ஆழ்வாப்பிள்ளை, ஜீ ஏ தவத்துரை (உதவி சட்ட வல்லுனர்) ஆகியோரைக் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது

இந்துமாமன்றம் அமைக்கவிருக்கும் கலாசார நிலையத்திற்கு நிதி சேர்ப்பதற்கு முன்னின்று உழைத்து கட்டிட அத்திபாரச் செலவிற்கு தாம் நிதி சேர்த்து தருவதாக கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் உறுதியளித்தனர்

கூட்டத்தில் சமுகமளித்திருந்த பலர் உடனடி நன்கொடையளித்தனர் சுமார் பதினைந்து ஆயிரம் ரூபா கட்டிட நிதியாகச் சேர்க்கப்படடது.

## 75,000 பேர் தபால் மூலம் வாக்களிப்பர்

கோட்டை, திங்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கு வசதி செய்துகொடுக்குமுகமாக நாட்டின் சகல கச்சேரிகளிலும் தபால் கந்தோர்களிலும் தேர்தல் பதிவுப் புத்தகங்கள் ஏப்ரல் 3ம் திகதியிலிருந்து வைக்கப்பட்டிருக்கும்.

தபால் மூலம் வாக்குகளைச் செலுத்துவதற்கான விண்ணப்பங்கள் மே மாதம் 3-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுளள அரசாங்க உத்தியோகத்தர்கள, இ போ ச பஸ் சாரதிகள அரசாங்க புகையிரதப் பகுதி சாரதிகள கட்சி அபேட்சகர்கள பொலிஸ், ராணுவம் போன்ற பிரதான சேவைகளில் ஈடுபட்டுளளவர்கள ஆகியோரே தபால் மூலம் வாக்களிக்கத் தகுந்தவர்கள எனவும் அறிவிக்கப்பட்டுளளது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் 75,000 பேர் தபால்மூலம் வாக்களிப்பார்கள எனக் கணிக்கப்பட்டுளளது கடந்த தேர்தலின் போது 34,000 பேர் தபால மூலம் வாக்களித்தனர்.

## இன்று அசைஸ் விசாரணை

யாழ்ப்பாணம் செவ்வாய்

வடபகுதி அசைஸ் நீதியரசர் டாக்டர் சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## தேசிய விளையாட்டு விழாவில் வேடர் அணிவகுப்பு

### இன்று கொழும்பில் ஆரம்பம்

கோட்டை, செவ்.

இலங்கையின் முதலாவது தேசிய விளையாட்டு விழா கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் இன்று ஆரம்பமாகிறது. சமாதானச் சின்னமாக 200 புருக்கள் விழா ஆரம்பத்தில் பறக்கவிடுவதைத் தொடர்ந்து பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விழாவை ஆரம்பித்துவைப்பார்.

வேடர் சமூகத்தின் அணிவகுப்பு ஒன்றும் விழாவில் இடம்பெறும். வேடர் சமூகத்தினர் நேற்று மாலையே கொழும்பு வந்துசேர்ந்துள்ளனர்.

ஏப்ரல் மாதம் 6ந் திகதிவரை நடைபெறும் இவ்விழாவில் 35 விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும். இறுதி நாளன்று மகாதேசாதிபதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நவீன ஜெர்மன் எந்திர சாதனங்களால் திறம்படத் தயாரித்த 'ஒட்டக மார்க்' செங்கற்கள் விற்பனைக் குண்டு. நேரில்அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க.

ஓராண்டு காலம் பாவித்த பெரிய 'ரில்லர்' ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஜ ஞ செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை. 1962

சுண்டிக்குளிக் கண்மையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய மாடி வீடு ஒன்று 3 பரப்புக்காணியில் விற்பனைக் குண்டு. விண்ணப்பிக்கவும்: த. பெ 47, யாழ்ப்பாணம் 1669

### வாடகைக்கு

ஸ்ரான்லி ரோட்டில் வெலிங்டனுக்கும் வின்ஸர் தியேட்டர்களுக்குமிடையில் உள்ள ஒரு புதிய கடையில் அலுவலக பாவிப்புக்கு ஒரு சிறிய பகுதி வாடகைக்கு விடப்படவிருக்கிறது. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 1961 C/o 'ஈழநாடு'. யாழ்ப்பாணம் 1961

### தேவை

**வீடு.**

வீடு வளவு பிரயோசனத்துடனும் மின்சாரத்துடனும் குறைந்த காலம் இரண்டு வருடத்திற்கு உடனடியாக வாடகைக்குத் தேவை. கூடியமாதவாடகை ரூபா ஐம்பது. நல்லஇடத்தில் புகையிரத ஸ்தானத்துக்கு அல்லது பிரதான பஸ் பாதைக்குக் கிட்டியதாக யாழ்ப்பாணம் திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், தாவடி, சுதுமலை, மானிப்பாய், உடுவில், சுன்னுகம் விரும்பத்தக்கது. மனுச்செய்யவும். மு. கந்தையா இளைப்பாறிய ஓவசியர் சுதுமலை வடக்கு, மானிப்பாய். 1960

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விஸ்வமடு விளையாட்டுப் போட்டிமுடிவு

விஸ்வமடு, திங்கள்

விஸ்வமடு விவசாயப் படை முகாமில் அகில இலங்கை விவசாயப்படையின் 3-வது ஆண்டு விழாவையொட்டி நடந்த விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:-

கரந்தாட்டம்:-ப'ஏ'பிரிவுக்கும்'பி' பிரிவுக்குமிடையே நடந்த கரபந்தாட்டப் போட்டியில் ஏ பிரிவினர் வெற்றி பெற்றனர்.

தாச்சிப்போட்டி: 'ஏ' பிரிவுக்கும் ஸி பிரிவுக்குமிடையே நடந்த தாச்சிப் போட்டியில் ஏ பிரிவினர் 7-0 ஆட்டங்களால் ஸி பிரிவினரை வெற்றியீட்டினர்.

உதைபந்தாட்டம்: 'பி' பிரிவினருக்கும் டி பிரிவினருக்குமிடையே நடக்க விருந்த உதைபந்தாட்டப் போட்டியில் டி பிரிவினர் விளையாடமல் விட்டுக் கொடுத்ததைத் தொடர்ந்து பி பிரிவினர் இந்த விளையாட்டில் வெற்றியீட்டிக் கொண்டனர்.

திரு. ஏ. வலண்டைன் பொறுபில் நடந்த இவ் விளையாட்டுப் போட்டிகளுக்கு திரு சர்வேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்.

## ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு வெற்றி

சங்கானை, திங்கள்

சங்கானை ப. நோ. கூ. சங்க வெள்ளி விழாவை ஒட்டி சங்கானை பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில், முறையே சங்கானை நிகரை வாலிப மன்றம், சங்கானை வெண்நிலா விளையாட்டுக் கழகம், சுதுமலை ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஆகியன கலந்து கொண்டன. இறுதிப்போட்டியில் சங்கானை வெண்நிலா விளையாட்டுக்கழகமும் சுதுமலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. மின் ஒளியில் நடைபெற்ற இக்கடும் போட்டியில் சுதுமலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது நடுவராக திரு. எஸ். சுந்தரம் கடமையாற்றினுர்.

## ரேயல் வெற்றி

புத்தூர், திங்கள்

புத்தர்கலட்டி வீனஸ் கழகம் நடத்தும் கவிஞர் மு. செல்லையாவின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊரெழு 'ரேயல் விளையாட்டுக்கழகமும் வதிரி 'வின்னேஸ்' விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டதில் ஊரெழு 'ரேயல்' 3 2 கோல்களால் வெற்றியீட்டியது. இப் போட்டி தொடங்கி முடியும்வரை விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

இப் போட்டி புத்தர் கலட்டி வீனஸ் திடலில் நடைபெற்றது.

## கிளித்தட்டுப் போ டி

வேலணை, திங்கள்

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் நடத்தும் செல்லத்துரை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான கிளித்தட்டுப்போட்டி நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் போது வேலணை செட்டிபுலம் சனசமூகநிலையமும் புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும் பங்கு பற்றி தலா 12—0 பழம் பெற்று செட்டிபுலம் சனசமூக நிலையம் வெற்றியீட்டியது. அன்றைய தினம் வேலணைதேவி கோட்டம் சனசமூகநிலையத்திற்கும் புங்குதீவு காந்திஜி சனசமூக நிலையததிற்கும் இடையில் நடைபெற்ற கிளித்தட்டுப் போட்டியில் முறையே 8--9 பழங்களைப் பெற்று காந்திஜி சனசமூக நிலையம் வெற்றியீட்டியது போட்டியை விளையாட்டுப் போதஞசிரியர் பி பொன்னுச்சாமி நடத்திஞர்.

## விவசாய மன்னர்களை தெரிவதற்கு முயற்சி

முசலி, திங்கள்

மன்ஞர் மாவட்டத்தில் விவசாய மன்னர்களைத் தெரிவு செய்வதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. தற்பொழுது மன்ஞர் மாவட்டத்திலுள்ள மூன்று காரியாதிகாரி பிரிவுகளாக மன்ஞர் பட்டினம், மாந்தை, முசலி ஆகிய பகுதிகளில் பகுதி பகுதியாக விவசாய மன்னர்களைத் தெரிவு செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன.

.........

## அரிசி விலை

## உடுவிலில் 'மோகனும்பாள்' புகழ் "சேது" சகோதரர்கள்

உடுவில், திங்கள்

இலங்கை வந்துள்ள 'தில்லாஞ மோகனும்பாள்' புகழ் நாதஸ்வரக் கலைஞர்கள் சேதுராமன் சகோதரர்கள் நேற்று இரவு உடுவில்திறந்த வெளியரங்கில் காட்சி தந்தார்கள்.

இணுவில் இசை நடன கிராமியக் கலைக்கல்லூரியின் அழைப்பை ஏற்று இவர்கள் நேற்று இரவு மேற்படி கலைக் கல்லூரி நடத்திய அகில இலங்கை சிறந்த நடிகர் தெரிவுப் போட்டியின் மத்தியில் பொதுமக்கள் முன்னிலையில் தோற்றினர்.

உடுவில் கிராமசபைத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இப்போட்டியின் மத்தியில் தோற்றிய 'சேது' சகோதரர்கள் அங்குநாதஸ்வரம் வாசிக்க முடியாமற் போனது பொதுமக்களுக்கு பெரும் ஏமாற்றமாக முடிந்தது.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம், சேதுராமன் சகோதரர்களை வரவேற்றுப் பேசிஞர். அரசாங்கத்தின் கட்டுப்பாடுதான் அவர்களின் கச்சேரியை இன்று நாம் கேட்க முடியாமற் போனதற்கு காரணம் என திரு. முத்துலிங்கம் குறைபட்டுக் கொண்டார்.

இணுவில் என். ஆர். ஆர். சின்னராசா, திரு. கணேசு ஆகியோரும் தில்லாஞ சகோதரர்களுடன் மேடையில் தோற்றினர்.

## 'மேடையேற்றுவதன் மூலம் மட்டும்நாடகக்கலை வளரமாட்டாது'

உடுவில், திங்கள்

"நாடகங்களை பலவாறுக அரங்கேற்றுவதால் மட்டும் நாடகக்கலை முன்னேறமாட்டாது. நாடகக்கலை வளர நாடக இலக்கணங்களுக்கு அமைய ஏற்ற முயற்சி அளித்தல் அவசியம். நாடகம் அரங்கேற்றம் செய்யு முன் நடிகர்களுக்டி போதிய அவகாசம் கொடுத்து பயிற்றுவித்தல் வேண்டும். நடிகர்கள் தம் நடிப்பினுலேயே முன்னேற வேண்டும். மேடையேறும் அளவைக் கொண்டு முன்னேறுவதாகக் கருதக்கூடாது. இசைத்துறையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள இக்கல்லூரி நாடகத் துறையை வளர்க்க முன்வந்தது பாராட்டக்கூடியது. இப் போட்டி நாடக வளர்ச்சிக்கு நல்ல ஒரு உறுதுணையாகும். கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சி பாராட்டத்தக்கது"

இணுவில் இசை நடன கிராமியக் கலைக்கல்லூரி நடத்திய அகில இலங்கை சிறந்த நடிகர் போட்டியில் பிரதம மத்தியஸ்தராக கலந்துகொண்ட கலையரசு திரு. சொர்லிங்கம் மேற்கண்டவாறு கூறிஞர்.

மேற்படி இசை நடன கிராமியக் கலைக்கல்லூரியின் நிர்வாக அதிபர் திரு. ரி. எஸ் சண்முகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தி பேசியதாவது:

இலங்கையில் இசைத்துறை வளர்ச்சிக்கு பலகல்லூரிகளும், நிலையங்களும் ஸ்தாபனங்களும் அயராது உழைத்து வரும் இவ்வேளையில் நாடகக் கலைத் துறை வளர்ச்சிக்கு ஒரு பயிற்சிக் கல்லூரியும் இல்லாதிருப்பது வேதனைக்குரியது. நாடகக்கலை ஒரு குழு முயற்சி மூலம் நடைபெறுவதால் அங்கு தனி ஒருவனின் நடிப்புத் திறனை காண முடியாதிருக்கலாம். தனிப்பட்ட ஒருவனின் நடிப்புத் திறமையைக் காணவேண்டுமானுல் அவன் தன் திறமையை வெளிக்காட்டவேண்டுமானுல் இதுபோன்ற சிறு நாடகப் போட்டிகளை ஏற்படுத்தவேண்டும். இக் கருத்துக்களை முன்வைத்தே இப்போட்டியை நாம் நடத்துகிருேம். எமது முயற்சி நாடகத்துறையில் பலரை உருவாக்கும் என்பது உறுதி.

போட்டி அமைப்பாளர் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை நன்றியுரை கூறுகையில், கலையை வளர்க்க நேர்மையான புனிதத் தன்மையுடன் நாம் செயலாற்றி வரவேண்டும் என்ருர்.

## 'எந்த அரசாங்கம்வந்தாலும் பிரச்னைகளை எடுத்துரைப்பேன்'

[illegible] தந்தி [illegible]யருக்கு

திரு. அமிர்தலிங்கம் உறுதி

வேலையற்ற

## பட்டதாரிகள் சங்க புதிய தலைவர்

(நமது நிருபர்)

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் புதிய தலைவராக திரு. என். கே. மகாலிங்கம் ஏகமனதாக தெரிவுசெய்யப் பட்டார்.

மேற்படி சங்கத்தின் தொகுதிவாரி நிர்வாகசபையின் விசேஷ கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடந்தது. திரு. சதானந்தன் தலைமை வகித்தார்.

சங்கத்தின் தீர்மானங்களை சரிவர அமுல் நடாத்த தகுதிவாய்ந்த தலைவரை உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதையடுத்து புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டார்.

சர்வகட்சி பொது மகாநாட்டினை ஏப்ரல் வாரத்தில் நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் முன்ஞள் தலைவர் திரு. க. சதானந்தன் போஷகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

## சிறுவன் பரிதாப மரணம் முதலுதவிக்குகூட வைத்திய வசதி கிடைக்கவில்லையாம்

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு நாகலிங்கம் கணேசு என்பவரின் ஆறு வயதுச் சிறுவன் இரத்தின குமார் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பியதும் வயிற்ருேட்டமும் வலிப்பும் கண்டு மரணமானதாகச் சொல்லப்படுகின்றது.

சிறுவனை நோய் கண்டதும் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அங்கு வைத்தியர் இல்லாமையால் திரும்ப வீட்டிற்கு கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும் வைத்தியர் தனது எழுவைதீவு பார்வைக்குச் சென்றுவிட்டதாகவும் அச்சமயம் ஆயுள்வேத வைத்தியர் இருவாரம் லீவில் சென்றுவிட்டதாகவும் தெரிகின்றது. முதலுதவி செய்வதற்குக்கூட வைத்திய வசதியில்லாது போய்விட்டதாம்.

பெற்ருேர்கள் வீட்டிற்கு திரும்பும் வழியில் சிறுவன் மரணமானதாகத் தெரிகிறது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. சிவனடியான் விசாரணை செய்தார்.

## பாராளு பிரசங்கம்

## 'இந்துசமய பாடத்தில் மாற்றம் தேவையற்றது'

— யா. இ. க. தலைவர்

புத்தூர், திங்கள்

'கல்வி அமைச்சு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பத்திரப் பரீட்சையில் இந்து சமய பாடத்திட்டததில் சில பகுதிகளைத் தவிர்த்து வேறு சில பகுதிகளைப் புகுத்தியிருப்பது மிக மிக கண்டிக்கத்தக்க செயலாகும், எமது சமயத்தின் பெருமையை மங்கவைக்கும் இம்முயற்சியை நாம் அனைவரும் சேர்ந்து முறியடிக்காவிட்டால் எமது எதிர்காலச் சந்ததிக்கு மாபெரும் தீங்கு செய்தவர்களாவோம்.'

இவ்வாறுநேற்றையதினம் நடைபெற்ற யாழ் இளைஞர் கழககூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசிய கழகழகத் தலைவர் திரு இரத்தின கோபால் குறிப்பிட்டார்.

யாழ் விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற இச்கூட்டத்தில் காலஞ்சென்ற சைவப்பெரியார் திரு. இராசரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதோடு அவரது சேவை குறித்து பாராட்டும் வழங்கப்பட்டது.

சுகாதரப்பரிசோதகர் திரு. என். செல்லப்பா டாக்டர் திரு. சண்முகலிங்கம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்,

## உலகக்கண்காட்சி 815 ஏக்கரில் நடக்கிறது

ரோக்யோ. மார்ச் 30

ஒசாகாநகரத்தில் நடைபெறவிருக்கும் எக்ஸ்போ70 உலக கண்காட்சியைப் பற்றிச் சில விபரங்கள்:

இக்கண்காட்சி 815 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப் பட்டுள்ளது. சுமார் 70க்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்கின்றன. இக்கண் காட்சிக்கு நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூபா 16-82 சதம் இளம் வயதினருக்கு ரூபா 12-64சதம் 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ரூபா 8-41 சதம் இக் கண்காட்சிக்கு நான்கு நுழைவாயில்கள் அமைக்கப் பட்டுள்ளன,

இந்திய நாட்டியங்கள், தாய்லாந்து நாட்டின் யானை ஊர்வலங்கள், அழகுப் பேரட்டிகள், மிருகங்களின் விளையாட்டு மற்றும் பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். காரைநிறுத்துவதற்காக 21,500 கார்கள் கொள்ளக்கூடிய 'கார்பார்க்கு'கள் அமைக்கப்பட்டுள்ளன. புகைப்படம் எடுக்க விரும்புபவர்களுக்கு வாடகையாகக் கொடுக்க சுமார் 3.000 புகைப்படக் கருவிகள் வைத்துள்ளார்கள். எதிர்பாராதவிதமாக சில சமயம் மழைவந்தால் அதற்காக சுமார் 10,000 குடைகள் வைத்துள்ளனர். இக கண்காட்சியில் மிகப்பெரியது ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அரங்கமாகும். ரஷ்யா தன்னுடைய அரங்கத்துக்காக 14 கோடி ரூபா செலவுசெய்துள்ளது. அமெரிக்கா தன்னுடைய அரங்கத்துக்காக 7 கோடி ரூபா செலவு செய்துள்ளது. இந்தியா தன்னுடைய அரங்கத்துக்காக 2 கோடி 10 லட்சம் ரூபா செலவு செய்துள்ளது.

முருங்கனில்

## வீரமாமுனிவர் விழாஎடுக்க முயற்சி

முசலி. திங்கள்

முருங்கனில் வீரமாமுனிவர்விழா அடுத்தமாதம்5-ம் திகதி சிறப்பான,முறையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றுவருகின்றன

இவ்விழாவையொட்டி ஒரு சிறப்புமலர் வெளியிடப் படும்

விழாவைசிறப்பானமுறையில் நடாத்த முருங்கன் கத்தோலிக்கதிருச்சபை பங்குக்குரவர் வண பிதா ஜெபநேசனும், முருங்கன் மெதடிஸ் மிசனைச்சேர்ந்த வண ஜெயராஜசிங்கமும் முயற்சி எடுத்துவருகிருர்கள

ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

சீதன சேமிப்புக்கு
வருடம் 9 சதவீத வட்டி
கொடுக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) நம்பியார் தங்கவேலு
தினசரி 4 காட்சிகள் நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
(யாழ்ப்பாணம்) விஜயநிர்மலா - பாலையா
தினசரி 3 காட்சிகள் நடித்த

# சிரித்த முகம்

வின்ஸர் சிவாஜி — சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) — சௌகார் ஜானகி
தினசரி 4 காட்சிகள் நடித்த

# புதிய பறவை

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




**சிவாஜிகணேசன் - பத்மினி**
பாலையா, நாகேஷ், நம்பியார்,
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானு மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடிந்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்

பகுதியாக விவசாய மன்னார்களைத் தெரிவு செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன.

.........

## அரிசி விலை குறைகிறது

முசலி, திங்கள்

முசலிப் பகுதிகளான நானாட்டான் முருங்கன் பகுதியில் ஒரு கொத்து அரிசியின்விலை தொண்ணூறு சதம், ஒரு ரூபாயாக விற்படுகின்றது.

இப்பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட நல்ல விளைச்சலின் காரணமாகவே இவ்விலை இறக்கம் ஏற்பட்டது.

வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நடித்த
ராஜாவீட்டுப்பிள்ளை

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
எங்க ஊர் ராஜா

Now showing
**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya & Public holidays
4 Shows
Gig Young, Carol Lynley
in
THE SHUTTERED ROOM
(Color-adults only)
Sleep one night in the house
with the shuttered room
and you may never want
to sleep again.
தாழ்பட்ட அறைக்குள் ஓர்இரவு நடக்கும் திகில் நிறைந்த சம்பவம்.

**REGAL** JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Lex Barker
Ann Smyrrner
In
CODE 7 VICTIM 5

# 'எந்த அரசாங்கம்வந்தாலும் பிரச்னைகளை எடுத்துரைப்பேன்'

## தபால் தந்தி ஊழியருக்கு திரு. அமிர்தலிங்கம் உறுதி

தாவடி, திங்கள்

''தபால் தந்தி ஊழியர்களுடைய சிங்கள மொழிப் பிரச்னையை தொழிற் சங்க மூலம் மாத்திரம் தீர்த்து விடமுயாது. இதை அரசியல் ரீதியில்தான் தீர்க்க முடியும்: அடுத்து எந்த அரசாங்கம் பதவிக்குவந்தாலும் சரி, ஆட்சிக்குவந்ததும் தபால் தந்தி ஊழியர்களின் பிரச்னைகளை எடுத்துரைத்து ஆவன செய்வேன்.

இவ்வாறு ஆனைப்பந்தி உயர்கலை மன்றமண்டபத்தில் திரு. ஆ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றஅகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 20-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வட்டுக்கோட்டை முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

தாய்ச்சங்கத்தின் செயலாளர் திரு. சாஜனதாஸ உட்படப் பலர் உரையாற்றினர். புதுவருட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# அகில இலங்கை சிறந்த நடிகர் தெரிவுப்போட்டி

உடுவில், திங்கள்

இணுவில் இசை நடன கிராமியக்கலைக் கல்லூரி நடாத்திய அகில இலங்கை சிறந்த நடிகர், உபநடிகர்கள் தெரிவுப்போட்டிநேற்று மாலை உடுவில் திறந்தவெளி யரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்தும் திருகோணமலை, தெல்தெனியா, கொழும்பு, மன்னார், வல்காலை, கண்டி, ஹட்டன், தெரணியகல. அளவை போன்ற ஏனைய பாகங்களில் இருந்தும் பலர் இப்போட்டியில் பங்குகொண்டனர்.

கலையரசு சொர்ணலிங்கம் பிரதம மத்தியஸ்தராக போட்டிகளில் கலந்து கொண்டார். இணுவில் இசைநடன கிராமியக் கலைக்கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சியை தொடர்ந்து நாடகபோட்டி ஆரம்மாகியது.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு:

சிறந்த நடிகர்: நா. சண்முகலிங்கம் மயிலிட்டி தெற்கு, ச. சுப்பிரமணிய சர்மா, கீரிமலை; ரி. மக்சிமஸ் லெம்பேட் வல்காலை வான்மதி வளர்கலை மன்றம் மன்னார்.

சிறந்த உபநடிகர்: ஜோ. யூலியஸ் றெகல் வங்காலை வான்மதி வளர்கலை மன்றம், மன்னார். வி. ரி. ஏ. விஸ்வா, நல்லூர். நா. பாலசந்திரன் இளந்தமிழர் மன்றம் காங்கேசன் துறை.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வைகாசி மாதம் முற்பகுதியில் நடைபெறஇருக்கும் கலைவிழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

— —

## பொலிஸ் நிலையம் அமைக்க முயற்சி

முசலி, திங்கள்

முசலிக்காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த முருங்கன் கிராமசேவையாளர் பிரிவில் அடிக்கடி கொலைகள் ஏற்படுவதன் காரணமாய் முருங்கனில் ஒரு பொலிஸ் நிலையம் அமைக்க முசலிக் காரியதிகாரி திரு. வை. சொக்கலிங்கமும், மன்னார் அரசாங்க அதிபரும் முயற்சி செய்துவருகிறார்கள்.

இப்பொழுது இங்கு பொலிஸ் பதி வேலைகளை முருங்கன் கிராமசேவையாளரும் முசலிக்காரியாதிகாரியும் கவனிக்கிறார்கள்.

— —

## 'ஐயா'வுக்கு அனுதாபம்

புத்தூர், திங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தொழிலாளர் சங்க முக்கிய உறுப்பினரும் கொடிகாமத்தைச் சேர்ந்தவருமான ஐயா என்றழைக்கப்படும் வேலு துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதை யிட்டு ஆவரங்கால் மற்கு தமிழரசு வாலிபமுன்னணியினர் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

மரணமானதாகத் தெரிகிறது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. சிவனடியான் விசாரணை செய்தார்.

— —

## புராண பிரசங்கம்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை சிவன்கோவில் மகோற்சவ தினங்களில் நடைபெற்ற திரு. வி. நல்லையாவின் திருநாவுக்கரசு நாயனார்புராணப் பிரசங்கம் தொடர்ந்து நேற்றுமுதல் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை தினமாகிய அடுத்தமாதம் 30 ந்திகதிவரை தினசரி மாலை 4 முதல் 6 வரை நடைபெறும்.

சீதன சேமிப்புக்கு
**வருடம் 9 சதவீத வட்டி**
கொடுக்கப்படும்
இச்சேமிப்பை 30 நாள் அறிவித்தலில்
வருடம் 8 சத வீத வட்டியுடன்
எப்பொழுதும் எடுக்கலாம்
மறுவிபரங்கட்கு:-

# தம்பி அன் கோ

வண்ணார்பண்ணை — யாழ்ப்பாணம்

# 10,000
# மசி-பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாது.



10,000 மசி - பேர்குசன், நாட்டின் ட்ராக்டர்கள் தொ... 15% மானவை.

10,000 மசி - பேர்குசன் ட்ராக்டர்கள், ...ல கோடி ரூபாய் ... பெறுமதியான பதில் உறுப்புக்கள், ...ணகொண்டவை.

10,000 மசி - போகுசன் உரிமையாளரே இத் ட்ராக்டரின் வேளாண்மைப் பாவனைச் சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி - பேர்குசன். நாடெங்கிலும் இருபத்து மூன்று நிலையங்களில் சேவை வசதி கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி - பேர்குசன் இன்றும் பாவனையில் உள்ளது. எனவே ... 10,000 மசி - பேர்குசன் உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே!

பிறவுன் அன் கொம்பெனி லிமிட்டெட
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. துருக்கியில் 2 ஆயிரம்பேர்பலி?

# பயங்கர பூகம்பத்தின் விளைவு

## ஆயிரக்கணக்கானேர் பூமிக்கடியில் புதையுண்டனர்

அங்காரா, மார்ச் 30

மேற்கு துருக்கியில்நேற்று ஏற்பட்ட நில அதிர்ச்சியில் அதிகபட்சம் 2000பேர் பலியாகியிருக்கலாம் என்று கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன.

பூமி அதிர்ச்சிக்குள்ளான பகுதிகளில் நிவாரணவேலைகளில் ஈடுபட ஆயிரக்கணக்கானவர்கள் போயிருக்கிறார்கள். பல நாடுகள் நிவாரண உதவிகளை அனுப்பியுள்ளன.

கிட்பீஸ் நகரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த நகரம் முற்ருகவே அழிந்துபோய்விட்டதாகவும்(ந பப்படுகின்றது.

1966ம் ஆண்டுக்கு பிறகு துருக்கியில் இப்பகுதியில் வருடாவருடம் பூகம்பம்ஏற்பட்டு பலத்த சேதம் விளைந்துவருகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர்உடன்நிவாரண உதவிகள் செய்யும்படி உலக நாடுகள் பலவற்றைக் கேட்டிருக்கின்றது.

மேற்கு துருக்கியில் ஏற்பட்ட இந்த பூகம்பம் துருக்கி முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது' வெகு தொலைவிலுள்ள அமெரிக்காவிலும்கூட இதன் அதிர்ச்சி உரைப்பட்டதாம்,

முதலில் வந்த செய்திகளின்படி பூகம்பத்தில்குறைந்தது 600 பேரிலிருந்துஆயிரம் பேர்வரை மாண்டிருக்க வேண்டும் என்று கருதப்பட்டது, இப்பொழுது2000பேர் வரை மாண்டிருக்கவேண்டும் என்று அஞ்சப்படுகிறது.

இடிபாடுகளில் புதைந்து கிடக்கும் சடலங்களை மீட்பதில் மீட்பு கோஷ்டிகள் ஈடுபட்டுள்ளன. சுரங்கங்களில் வேலைசெய்துகொண்டிருந்த ஏராளமான தொழிலாளர்களும் புதையுண்டு போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது.

துருக்கியில் ஏற்பட்டுள்ள இந்த அழிவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மாதிரியான உதவிகள் தேவைப்படுகின்றன என்று பிரிட்டன் கேட்டிருக்கின்றது பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் அடுத்தவாரம்துருக்கிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

## சப்பாத்தில் ரம்பங்களை ஒளித்து வைத்திருந்தார்

### சர்வதேசக்கடத்தல் மன்னன்

புதுடில்லி, மார்ச், 30

சர்வதேசக் கடத்தல் மன்னன் என்று பேர்போன வால்காட் மீண்டும் சிறையிலிருந்து தப்பி ஓடுவதற்கு முயற்சி எடுத்து தோல்வி கண்டிருக்கிறார்.

சர்வதேச கடத்தல் மன்னன் என்று அழைக்கப்படும் வெள்ளைக்காரர் வால்காட், பொய்பாஸ்போட் காட்டி மோசடி செய்ததால், சென்னையில் சிறைத்தண்டனை அனுபவித்தார்.

வெளிநாட்டினருக்காக உள்ள சட்டங்களை மீறியதாகவும், விமானத்தில் ஏறி தப்பி ஓட முயற்சித்ததாகவும், டெல்லி கோர்ட்டிலும் அவர் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

விசாரணைக்காக பம்பாய் சிறையில் இருந்து டெல்லிக்கு வால்காட் கொண்டு வரப்பட்டார். சிறைச்சாலையில் ஓர் அறையில் அடைப்பதற்கு முன்பு வால்காட்டின் பூட்ஸ்களை கழற்றும்படி சிறைஅதிகாரிகள் கேட்டனர்.

பூட்ஸ் கழற்றப்பட்டதும் அதன் உள்ளே இரும்புகம்பிகளை அறுப்பதற்கு வேண்டிய கருவிகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

2 சிறு ரம்பங்கள், துண்டு வயர்கள், இன்னும் சிலகருவிகள், 2 பூட்ஸ்களுக்குள் ரகசிகமாக ஒளித்து வைக்கப்பட்டு இருந்தன.

2 பூட்ஸ்களும் கைப்பற்றப் பட்டன, வால்காட்டுக்கு இப்போது பலத்த காவல் போடப்பட்டு உள்ளது.

ரம்பங்கள் வைக்கப்பட்ட பூட்ஸ்களை வால்காட்டுக்கு யார் கொடுத்தது் என்பது தெரியவில்லை: இது பற்றி பம்பாய் பொலீசாரிடம் தகவல் கேட்கப்பட்டு உள்ளது.

வால்காட் தப்பிச் செல்ல உதவியாக இருப்பவர்கள் குறித்து பொலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சத்தியன்-ஷீலா இருவருக்கும் பரிசு

திருவனந்தபுரம், மார்ச் 30

1969-ம் ஆண்டு சிறந்த மலையாள நடிகருக்கான பரிசு திரு. சத்தியனுக்கும், சிறந்த நடிகைக்கான பரிசு ஷீலாவுக்கும் கிடைத்திருக்கிறது. சத்தியன் கடல்பாலம் என்ற படத்திலும், ஷீலா கள்ளிசெல்லம்மா என்ற படத்திலும், நடித்தமைக்காக பரிசு கிடைத்திருக்கிறது. இவர்கள் இருவரும் செம்மீன் என்ற படத்தில் சிறப்பாக நடித்து ஏற்கனவே புகழ் பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரள முதலமைச்சர் திரு. அச்சுதமேனன் பரிசுகளை வழங்கினார்.

1969-ம் ஆண்டுக்கான சிறந்த மலையாள படமாக ''குமார சம்பவம்'' தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. ''அடிமகள்'' படத்துக்கு 2-வது பரிசும் ''ஜென்மபூமி'' படத்துக்கு 3-வது பரிசும் கிடைத்திருக்கிறது.

சிறந்த நடிகர்: சத்யன் (கடல்பாலம்): நடிகை- ஷீலா (கள்ளிசெல்லம்மா): டைரக்டர்- ஏ வின்செண்ட் (நதி)

## 'ஜெய்'க்கு ஆண் குழந்தை

சென்னை, மார்ச் 30

நடிகர் ஜெய்சங்கர் ஆண் குழந்தைக்கு தந்தையாகியிருக்கிறார். நடிகர் ஜெய்சங்கர் கீதா என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டது தெரிந்ததே. இவர்கள் இருவருககும் ஆண்குழந்தை பிறந்திருக்கிறது, சென்னை ஆஸ்பத்திரியில் பிரசவம் இடம்பெற்றது.

— —

## "ஏட்டுக் கல்வியுடன் திருப்தியடையக் கூடாது"

### கல்லூரி விழாவில் செனடடர் நடேசன்

உரும்பராய் திங்

சிறந்த கல்வியின் மூலம் தான் உலகத்தின் எதிர்காலத்தை மிகவும் உறுதியாக ஊடுருவிப் பாக்கும் ஆற்றல் கிடைக்கின்றது. ஏட்டுச் சுரைக்காய்எப்படிசமையலுக்கு உதவாமல் போகுமே அதுபோலவே வெறும் ஏட்டுப்படிப்பும் உதவாமல் போகும்.

உரும்பராய் இந்துக் கல்லூரியின் கட்டிட நிதிக்காக உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற கதம்ப விழாவுக்கு தலைமை தாங்கிப் பேசிய செனட்டர் திரு. சோ நடேசன் கியூ ஸி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் எமது சமுதாயம் ஏட்டுப்படிப்போடு மட்டும் நின்றுவிடாது சகல துறைகளிலும் ஒரு முன்னேற்றமான உண்மைக் கல்வியை கைக் கொள்ள வேண்டும் எங்களது செயல்கள்தான் எம்மைமேம்படுத்தும் நமது 'திருக்குறள்' நூலின் வழியே உண்மையாக ஒவ்வொரு குடிமகனும் நடப்பரானல் நமக்கு ஏற்படும் துன்ப, பிணிகள் மிகவும் இலகுவாக எமது உள்ளுணர்வுகளால் தீர்க்கப்பட்டுவிடும். ஆசிரியர்களாயினிம்சரிமாணவர்களாயினும் சரிமேடையில் நின்று முழங்குவதைவிட்டு உண்மையான எமது வாழ்க்கைக் கலாச்சாரத்தில் இவைகளைக் கைக் கொண்டு சுகதேகிகளாக இவ்வுலகத்தில் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்,

கல்லூரி அதிபர் திரு அ. வைத்திலிங்கம் பேசுகையில் அரசாங்கம் பாடசலைகளைச் சுவீகரித்து சகல தேவைகளையும் அவ்வப்போது உதவுகின்றபோதிலும் அதனால் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்ய மூடியாதென்றும், எனவே பொது மக்களும் நிதிசேர்த்து பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாலே மாணவர்களின் கல்வி நிலையையும் பாடசாலையும் முன்னேற்ற முடியும் என்றும் சொன்னார்.

கல்லூரி மாணவர்களால் பூஜா நடனம். பாட்டுக் கச்சேரி, சைலொக் அன்திபொன்ட்' என்னும் ஷேக்ஷ்பியரின் ஆங்கில நாடகமும் உடற்பயிற்சி, திருநெல்வேலி கலைக்கேயில் மன்றத்தினரின் நடனங்களும் 'சிங்ககிரிக் காவலன்' என்னும் சரித்திர நாடகமும் விழா இடம் பெற்றன.

## "பத்துவருடம் ஆட்சி செய்தால் அக்காணி அவருக்கே சொந்தம்"

### நீதியரசர் கலாநிதி வீரமந்திரி உரை

யாழ்ப்பாணம், திங்கள்

''நீதிமன்றத்தில் நியாயவாதிகள் பொய் உறுதிகளையோ அல்லது எவ்வித பொய்ப்பத்திரங்களையோ சமர்ப்பிக்கப்படாது. பழையன போக்கி புதியன புகுத்தி சட்ட நீதியையும் நிலைநாட்டவேண்டும். உதாரணமாக பத்து வருடங்களாகஒருகாணியை ஒருவர் பராமரித்து ஆட்சி செய்தால், பத்து வருடத்துக்கு மேல் ஒருநாள் போனாலும் காணி உரிமையாளருக்கு உரிமையற்றது. பத்து ஆண்டு பராமரித்தவருக்கே காணி சொந்தமாகும் இப்படியான நுணுக்க சிவில் சட்டங்களை சாதாரண மனிதன் [illegible] வேண்டும். அவர் எக்காரணம்பற்றியும் பித்தலாடட வழிசெல்வது பிழை. ஒருவரது நியாயவாதி ஓர் கட்சிக்கும் நீதிமன்றத்துக்கும் பாரிய கடப்பாடுள்ளவராவார். ஆதை நியாயவாதிதான் ஒரு நீதிமன்ற உத்தியோகஸ்தராக உணர்ந்து உதவியாக நடக்கவேண்டும்.''

வழக்கறிஞர் திரு. சி. பொன்னம்பலம் நன்றியுரை கூறினர்.

தேநீர் விருந்துபசாரத்துக்கு வழக்கறிஞர்கள் திரு எஸ் இளையதம்பி ஜே பி, திரு சி சி சோமசேகரம் ஏற்பாடு செய்திருந்தனர்.

(கு. வி. ம.)

— —

## தாய்மொழிப் பயிற்சிக் கருத்தரங்கு

உரும்பராய், செவ்.

கனிட்ட பொதுத்தராதரப் பத்திர (சாதாரண) தேர்வுக்கான தாய் மொழிப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று முற்பகல் வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நாளை பிற்பகல் வரை நடைபெற இருக்கின்றது. வடமாநிலக் [illegible]

## சேதுராமன் சகோதரர்கள்

திருப்பதி

## ஏழுமலையானுக்கு மாதம் ரூ. 5 கோடி வருமானம்

திருப்பதி, மார்ச் 30

திருப்பதி ஏழுமலையானுக்கு 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் இருக்கின்றன. ஒரு வருடத்தில் 5 கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

திருப்பதி மலை மேல் உள்ள ஏழுமலையானை கும்பி[illegible] ஒவ்வொரு நாளும் [illegible]ரக்கணக்கான பக்தர் செல்வது தெரிந்ததே.

திருப்பதி ஏழுமலையானை அலங்கரிக்க வைரத்திலும் தங்கத்திலும் நகைகள் செய்யப்[illegible]டுள்ளன. இந்த ந[illegible]களின் மதிப்பு ஒரு[illegible]கள் இப்போது மலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இனிமேல் 5 ரூபாய் கட்டணம் செலுத்தினால் மலைக்கு டாக்ஸியில் செல்லலாம்.

மலைக்கு இப்போது 70 பஸ்கள் செல்கிறன. மேற்கொண்டு 23 பஸ்கள் விடதிட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 21 லட்சம் ரூபாய்க்கு புதிய [illegible]கள் வாங்கப்படுகின்றன.

திருப்பதியில் உள்ள கோவிந்த ராஜசுவாமி கோவிலுக்கு வெள்ளித் தேர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 6[illegible]சம் [illegible]

## தேர்தல் பணம் திரட்டுகிறார்கள்

தாவடி, திங்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் உடுவில் தொகுதியில் போட்டியிடவிருக்கும் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு வி. தர்மலிங்கத்திற்கு வழங்குவதற்காக தாவடியைச்சேர்ந்த இளைஞர்கள் தேர்தல்பணம் திரட்டுகிறார்கள். [illegible]

## "ஒழுக்கமற்ற கலை திசையற்ற மரக்கலமாகும்"

### நாடக விழாவில் கலைஞர்கருத்து

யாழ்ப்பாணம், செவ்

''இன்றைய தமிழ் நாடக உலகு ஒழுக்கத்தை நிரம்பவும் எதிர்பார்த்து நிற்கிறது ஒழுக்கம் மீறிய கலை திசையற்று செல்லும் மரக்கலம் போன்றது. அதுசெல்லும் திசையற்று எங்காவது முட்டிமோதி தன்னையும் அழித்துக்கொள்வதோடு பிறரையும் அழித்துவிடுகிறது. எனவே நாடக ஆசிரியர்கள் மிக அவதானமாக ஒழுக்கத்தைவலியுறுத்தும் நடகங்களையே உருவாக்க வேண்டும்.

இவ்வாறு திரு. ஐயாயோசேப் நேற்று முன்தினம் குருநகர் புனித ஆரோக்கியநாதர் சனசமூகநிலையத்தினரின் ஆதரவில் நடைபெற்ற நாடக விழாவின் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்[illegible]

இறுதி நிகழ்ச்சியாக வி, எம். ஜெராட் கதை வசனம் எழுத ஆர். ஜெயசீலன் டைரக்ட் செய்த 'நிறைகுடம்' என்னும் நாடகமும் இடம்பெற்றது. (புத். நிரு.)

— —

## பரிசுபெற்ற நாடகங்கள்

நவாலி, ஞாயிறு

கோண்டாவில் வடக்கு கிராம முன்னேற்றச்சங்க நாடக மன்றத்தின் 2-வது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி கடந்த 26-ம், 27-ம். 28 ம் திகதிகளில் மேற்படி சங்க மண்டபத்தில் நாடகப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட ஆறு நாடகங்களில் வதிரி மத்தி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு மேல் ஒருநாள் போ[illegible]லும் காணி உரிமையாளருக்கு உரிமையற்றது. பத்து ஆண்டு பராமரித்தவருக்கே காணி சொந்தமாகும் இப்படியான நுணுக்க சிவில் சட்டங்களை சாதாரண மனிதன் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும்'' என்று நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி நேற்று முன்திமிரவு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற மண்டபத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

சட்ட நூலக ஆதரவில் யாழ். மாவட்ட நீதவான் ஜனுப் ஐ. எம். இஸ்மாயில் தலைமையில் நடந்த வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:-

''ஒருவர் எத்தகைய குற்றச்சாட்டின் பேரிலும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டால், 24 மணிநேரத்துக்குள் நீதிஸ்தலத்தில் ஆஜர் செய்யப்படவேண்டும். இது போன்றவற்றை பொதுமனிதர் அறியவேண்டும். சட்டமும் பொதுமனிதனும் பரஸ்பரம் வழிபோகவேண்டும், சாதாரணமாக நிதிகளை நீதிமன்றங்கள் மூலமே கட்டாயம் விட்டுப்பெற வேண்டியுள்ளது. அதை பொதுமனிதன் அறியாது இருப்பான். அறியவைக்க வேண்டியது அவசியம். நியாயவாதி முழுக்கண்ணிய நம்பிக்கையுள்ளவராக நீதிமன்றங்களில் செயல்பட

[illegible] தேர்வுக்கான தாய் மொழிப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று முற்பகல் வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நாளை பிற்பகல் வரை நடைபெற இருக்கின்றது. வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் இன்று 9-30க்கு குறித்த கருத்தரங்கில் ஆரம்பஉரை நிகழ்த்துவார்.

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த வித்தியாரத்தினம் சோ. நடராசன், திருவாளர்கள் அ. வி. மயில்வாகனம்' எம். ஸி. சலீம், த. கனகரத்தினம், சி. எஸ். குலரத்தினம், கே. நிசங்கா, பண்டிதர் வ. நடராசா, பண்டிதர் சு. வேலுப்பிள்ளை ஆகியோர்கள் இன்றைய கருத்தரங்கில் பல துறைகளில் உரையாற்றுவார்கள்.

நாளை புதன்கிழமை நடைபெறும் கருத்தரங்கில் திருவாளர்கள் அ. அருளையா, எஸ். வேலாயுதபிள்ளை, திருமதி என். வேலாயுதபிள்ளை, செல்வி என். நவரத்தினசிங்கம், சோ. நடராசன் எம். ஸி, சலீம் த. கனகரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

வட்டாரரீதியாக ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் இக் கருத்தரங்கில் கல்வி அமைச்சின் அதிகாரிகளால் தயார்செய்யப்பட்ட பயிற்சிப் பத்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

திரு சி சி சோமசேகரம் ஏற்பாடு செய்திருந்தனர்.

(கு. வி. ம.)

## சேதுராமன் சகோதரர்கள்

தாவடி, திங்கள்

'தில்லானு மோகனம்பாள்' புகழ் நாதஸ்வர வித்துவான்களான மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை தாவடி முனியப்பர் ஆலய லட்சார்ச்சனை பூர்த்தியின்போது வருகைதந்து தரிசனம் செய்தார்கள்.

## 6 வழக்கறிஞர்கள் கட்சி மாறினர்

கேகாலை, திங்கள்

கேகாலை நீதிமன்றத்தைச் சேர்ந்த 6 அங்கத்தவர்கள் லங்கா சுதந்திரக் கட்சியின்று நீங்கி ஆர். ஜி. சேனநாயக்காவின் கட்சியான சிங்கள மகாஜன கட்சியில் சேர்ந்துள்ளார்கள் என இக்கட்சியின் இணைச்செயலாளர் திரு. டி. ஜே. வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

திருவாளர்கள் நிசங்கா உடலகம, உபயசேகராமாபா, தேவபிரியா ஜயவர்த்தன, மைத்திரி ஆறுபன, எம். ஐ. எம். மௌஜீட், டி. எல். கிரே ஆகிய ஆறு வழக்கறிஞர்களுமே கட்சி மாறியவர்களாவர்.

[illegible]ரங்களுக்கான பக்தர் செல்வது தெரிந்ததே.

திருப்பதி ஏழுமலையானை அலங்கரிக்க வைரத்திலும், தங்கத்திலும் நகைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ந[illegible]களின் மதிப்பு ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய்.

இப்போது புதிதாக ஏழுமலையானுக்கு 5 லட்சம் ரூபாய் செலவில் நகை செய்ய திட்டமிட்டுள்ளார்கள். வைரம்பதித்த காதணியும், தலையிற் சூட கிரீடமும் தயாரிக்கப்படும்.

பக்தர்கள் கோவிலின் உள் பகுதியில் நடந்து செல்லும் இடங்களில் தங்க தகடுகள் பதிக்கப்படுகின்றன. இதற்காக 3 லட்சம் ரூபாய் செலவில் தங்கத் தகடுகள் தயாரிக்கப்படுகின்றன.

கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் உண்டியலில் போடும் பணம் மூலமாகவும், விடுதி, ஓட்டல் மற்ற துறைகளின் மூலமாகவும் ஒரு வருடத்திற்கு 5 கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்குப் புதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திருப்பதி மலை உச்சிக்கு 60 லட்சம் ரூபாய் செலவில் புதிய ரோட் போடப்படுகிறது. இன்னும் ஒரு ஆண்டுக்குள் இந்த வேலை பூர்த்தியாகிவிடும். டாக்ஸி

ரூபாய்க்கு புதிய [illegible]கள் வாங்கப்படுகின்றன.

திருப்பதியில் உள்ள கோவிந்த ராஜசுவாமி கோவிலுக்கு வெள்ளித் தேர் செய்யத் தி[illegible]மிடப்பட்டுள்ளது. 6[illegible]சம் ரூபாய் செலவில் இந்தத் தேர் செய்யப்படும். இதற்காக 40 ஆயிரம் தோலா வெள்ளி வாங்கப்படுகின்றது.

.........

## சிறகுவலை திருட்டு

முசலி, திங்கள்

யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் சிறகுவலைத் திருட்டு அடிக்கடி நடைபெறுவதுபோல் மன்னுர் மாவட்டத்திலும் சிறகுவலைத் திருட்டு ஆரம்பமாகிவிட்டது.

மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்த முசலிக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கொக்குப்படையான் கிராமசேவையாளர் பிரிவில் ஒரு சிறகுவலைத் திருடடு சமீபத்தில் நடைபெற்றது இத்திருட்டைக் கொக்குப்படையான் கிராமசேவையாளர் திரு. பி. எஸ். அந்தோனிப்பிள்ளையும் சிலாவத்துறை கிராமசேவையாளர் திரு. எஸ். தியாகராசாவும் கண்டுபிடித்தனர். பின்பு இத் திருட்டு பற்றி முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம் விசாரணை நடத்தினர்.

யில் உடுவில் தொகுதியில் போட்டியிடவிருக்கும் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு வி. தர்மலிங்கத்திற்கு வழங்குவதற்காக தாவடியைச்சேர்ந்த இளைஞர்கள் தேர்தல்பணம் திரட்டுகிறுர்கள்.

### நல்லூர்

நலலூர் தொகுதியில் போட்டியிடும் டபக்டர் ஈ. எம் வி. நாகநாதனுக்குதேர்தல் பணம் வழங்குமுகமாக கந்தர்மடம் கைலாசபிள்ளையார் கோவிலடி வாலிபமுன்னணித் தலைவர் திரு சண்முகராஜா தலைமையில் பொதுவக்களிடையே நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது.

## இந்துமாமன்ற புதிய தலைவர்

கொழும்பு, திங்கள்

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு வீ. சிவசுப்பிரமணியம் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு ஆ சின்னத்தம்பி செயலாளராகவும், திரு எம் எஸ். கந்தையா பொருளாளராகவும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். உதவிச் செயலாளராக திருவாளர்கள்: த இரத்தினம், வ. நடராசா, இராச, சுப்பிரமணியம் ஆகியோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது

## தெப்பத்திருவிழா

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை ஸ்ரீவீரபத்திரசுவாமிகோயில் தெப்பத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி ஆலயத்திலிருந்து புறப்பட்டுகாங்கேசன்துறை வீதி வழியாக சென்று கடற்கரையை அடைந்து அங்கு தெப்பத்திருவிழா நடைபெற்றது:

இவ்விழாவில் பண்டிதர் குமாரசாமியின் கதாப்பிரசங்கம்பக்திபாடல்கள், நாதசுர தவில்கச்சேரி, இரட்டையர்குழு, றெக்ஸ்குழு இன்னிசை விருந்துஆகியவையும் இடம்பெற்றன.

## புதிய துணி கூப்பன்

கோட்டை, திங்கள்

துணிகள் வாங்குவதற்கு தற்போதுள்ள பங்கீட்டரிசிப் புத்தகத்தின் புள்ளிகளுடன் 24-வது அரிசிப்பங்கீட்டரிசிப்புத்தகத்தின் 109ம் இலக்கக் கூப்பனும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] யோசேப் நேற்று முன்தினம் குருநகர் புனித ஆரோக்கிய நாதர் சனசமூகநிலையத்தினரின் ஆதரவில் நடைபெற்ற நாடக விழாவின் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் காந்தி, அரிச்சந்திரா நாடகம் பார்த்ததால்தான் மகாத்மா ஆனுர் அவர் வாழ்ந்த சீரிய வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தது நாடகமே அது போன்ற சமூக உணர்வுகளையும் பிரச்னைகளையும் மையமாக வைத்து நடிக்கப்படும் நாகடங்களாலேமனிதகுலத்துக்கு நன்மை கிடைக்கும் என்று கூறினர்.

திருவாளர்கள் எம். இராசு கி. ஆரோக்கியநாதர், மு. புஷ்பராஜன் ஆகியோரும் கருத்தரங்கில் பங்குபற்றினர். விழாவின் முன்நிகழ்ச்சியாக கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் காரை சுந்தரம்பிள்ளை, வே. குமாரசாமி த. பரமலிங்கம் ஆகிய கவிஞர்கள் கலந்துகொண்டனர்.

[illegible]யோட்டி கடந்த 26-ம், 27-ம். 28 ம் திகதிகளில் மேற்படி சங்க மண்டபத்தில் நாடகப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் கலந்து கொண்ட ஆறு நாடகங்களில் வதிரி மத்தியூஸ் புரடக்சன் அளித்த 'அன்ருெருநாள்' நாடகம் முதற்பரிசையும் வெண்ணிலா நாடக மன்றம் அளித்த 'சீதா' நாடகம் இரண்டாவது பரிசையும் நவாலியூர் ஸ்ரீ கலைவாணி நாடகமன்றம் அளித்த 'அன்புப்பரிசு' நாடகம் மூன்ருவது பரிசையும் முறையே பெற்றன. இவ் விழாவிற்கு புலவர் செ. து. தெட்சணுமூர்த்தி அவர்கள் தலைமைவகித்து பரிசில்கள் வழங்கினுர்.

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம்-பறுளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை அடுத்தமாதம் 6ம் திகதி திட்கட்கிழமை தொடக்கம் நடைபெறும்.


## அபிஷேகத் திரவியங்கள்

### சந்தனக் குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)

★ பழனி வாசனை விபூதி

★ அபிஷேக குங்குமம்

★ பஞ்சாமிர்த சாமான்களும்

★ நைவேத்திய சமான்கள்

வாசனை மிகுந்த — தெய்வீக மணம் கமழும்

* "ராதா'' பத்மினி ஜவ்வாது
* 99 & 999 ஜவ்வாது
* சக்தி பூஜா அகர் பத்திகள் விளைவு சூடம், சாம்பிராணி

மற்றும்

கோவில் தேவைகளுக்கான சகலவிதமான சாமான்களும்

எம்மிடம் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

## எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்: 541

160, செட்டியார் தெரு, கொழும்பு-11. Residence: 7068


இந்திய

# ராஜ்ய சபையில் ஆளும் காங்கிரசின் பலம் குறைந்தது

புதுடில்லி, மார்ச் 29

இந்திய ராஜ்யசபையில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் பலம் குறைந்துள்ளது. ராஜ்ய சபைக்கு நடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பலத்த சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டுள்ளது.

240 மொத்த அங்கத்தவருள்ளராஜ்யசபையில் ஆளும் காங்கிரசின் பலம் இப்போது 87.

இரண்டாண்டுகளுக்கு ஒருதடவை வெளியேறும் அங்கத்தவர்களின் இடங்களுக்கு (மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தவரை) தெரிவுசெய்வதற்குநடந்த இடைத்தேர்தலில் திருமதி இந்திராவின் ஆளும் கங்கிரஸ் கட்சியினர் பலர் தோல்வியடைந்துள்ளனர்.

இந்திரா காங்கிரசின் முக்கிய தலைவர்களில்ஒருவரான திரு. சி. சுப்பிரமணியமும் இந்த இடைத் தேர்தலில் தோல்வியடைந்தது தெரிந்ததே.

240 பேர் உள்ள இந்தச் சபையில், ஆளும் காங்கிரஸைச் சேர்ந்த 87 பேரே இப்போது உள்ளனர்.

முன்னர் சுதந்திராவகித்த பெரிய எதிர்க்கட்சி ஸ்தானத்தை ஜனசங் இப்போது வகிக்கின்றது.

## ஜெகஜீவன்ராம் கவலை

சென்னை, மார்ச் 30

டெல்லி மேல்சபை தேர்தலில் சுப்பிரமணியம் தோல்வி அடைந்தது குறித்து. இந்திரா காங்கிரஸ் தலைவர் ஜெகஜீவன்ராம் கவலையடைந்துள்ளார்.

ஜெகஜீவன்ராம் கூறியதாவது:-

'சுப்பிரமணிம் அதின் தோல்வி, அதிர்ச்சி யளிக்கிறது. அவருக்கு வெற்றி வாய்ப்பு மங்கலாக இருந்த போதிலும் பலர் அவருக்கு ஆதரவு கொடுப்பதாக உறுதி அளித்தார்கள். இருந்தாலும் தோற்றுவிட்டார்.

'ஆயினும் இந்தத்தோல்வி காரணமாக பாராளுமன்றத்தில் தி. மு. க—இந்திரா காங்கிரஸ் உறவு பாதிக்கப்படாது. ஏன் என்ருல் சுப்பிரமணியத்தை வெற்றி பேறச் செய்வதாக திமுக ஒருபோதும் கூறவில்லை.'

கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் கூறியதாவது:-

'தமிழ்நாட்டில் அரசியல் 'விளையாட்டு'க்கு இடமில்லை என்பது இந்த தேர்தல் மூலம் நிருபிக்கப்பட்டுவிட்டது: பலம் இல்லாத கட்சி எந்த வகையிலும் பெரும்பான்மை ஆதரவைப் பெற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஒருவன் உலகம் முழுவதும் பெற்றாலும் தனது நித்திய ஜீவனை இழந்தால் அவனுக்கு லாபம் என்ன?
— இயேசுநாதர்.


ஈழநாடு

Eelanadu (National Tamil Daily
Telegram: "EELANADU", Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 18-ந் திகதி (31-3-70)


## குடியிருப்புப் பிரச்னை

யாழ்ப்பாண நகரில் அதிகரித்துவரும் குடியிருப்புப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதற்கு யாழ்ப்பாண நகரமேயர் ஒரு புதிய யோசனை தெரிவிக்கிறார். யாழ்ப்பாணநகருக்கு அருகேயுள்ள மண்டைதீவுக் கிராமத்தை யாழ்ப்பாண மாநகர சபையுடன் சேர்த்து அந்தக் கிராமத்தில் வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்கலாமென்பது மேயரின் ஆவல்.

மண்டைதீவுக் கிராமம் பண்ணைக்கடலுக்கு அப்பாலிருக்கிறது. அங்கு கிராமங்களில் தரிசுநிலங்கள் நிறையக் கிடக்கின்றன. பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த முடியாத நிலங்கள் நிறையவுள்ளன. அந்தக் கிராமங்கள் பலவிதத்திலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. யாழ் நகரமேயர் விரும்புவது மண்டைதீவுக் கிராமத்தை யாழ்ப்பாண மாநகரசபையுடன் சேர்த்து அங்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கினால் யாழ்ப்பாண நகரில் இப்போது நிலவும் இடநெருக்கடியைச் சமாளிப்பதுடன் மண்டைதீவுக் கிராமத்தை நவீனமாதிரிப் பட்டினமாகவும் உருவாக்கலாம். அங்கு குடிதண்ணீர்ப் பிரச்னைதான் பெரிதாக இருக்குமென்பது உண்மையே. ஆயினும் குருநகர்த் தண்ணீர்த்தாங்கியிலிருந்தோ வேறு புதிய திட்டத்தின் மூலமோ மண்டைதீவுக்குக் குடிதண்ணீர் விநியோகம்செய்வது இக்காலத்தில் கடினமான காரியமல்ல

யாழ்ப்பாண நகரில் இட நெருக்கடி நீங்கவும் மக்கள் அமைதியாகவும் சுகாதாரமாகவும் வாழவும் மண்டைதீவு போன்ற கிராமங்களில் வீடமைப்புத்திட்டங்களை ஏற்படுத்துவதுபயனுள்ளகாரியம் இதில் மேயர் மட்டுமல்ல மற்றையோரும் தொடர்ந்து முயற்சிசெய்யவேண்டும்.

## அரசியல் பேச்சு

இராணுவ முகாம்களில் அரசியல் பேச்சுக்களுக்கு இடமில்லையென்றும் இராணுவ சிப்பாய்கள் தங்கள் சொந்த அரசியல் கொள்கை எதுவாக இருந்தாலும் அரசியல் சர்ச்சைகளில் ஈடுபடக்கூடாதென்றும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலே இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு விடுத்துள்ள ஒரு சுற்றறிக்கையில் கேட்டுள்ளார். இது சரியான கோரிக்கையே.

இராணுவத்தில் மட்டுமல்ல அரசாங்க ஊழியர்கள், மத்தியிலும்கட்சிஅரசியல் பேச்சுக்கும் சர்ச்சைக்குமே இடமிருக்கக் கூடாது. அவர்களும் இந்நாட்டு மக்கள் தான்; அவர்களும் மனிதர்கள் தானென்பதுஉண்மையே அவர்கள் தமக்கெனச் சில கொள்கைகளையும் பின்பற்றுவார்களாக இருக்கலாம். அவர்கள் பொறுப்பும் கடமையுமுள்ளவர்கள். அரசாங்க ஊழியர், எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எவர் பிரதமராக வந்தாலும் அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்புமுடையவர்கள். இவர்கள் வெளிவெளியாக கட்சி அரசியல் சார்புடையவர்களாக நடந்துகொண்டால் நாட்டின் பாதுகாப்பும், நிர்வாகமும் சீராக நடைபெற முடியாமல்போவதுடன் நாட்டின் அமைதியும் குலைந்து ஜனநாயகமும் சிதைந்துவிடும்.

ஆயுதப் படையினரும் அரசாங்க ஊழியரும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருக்கவேண்டுமே தவிர எந்தக் கட்சிக்குமல்ல. இதே சமயம் இச்சேவைகளுக்கு ஆட்க...

# ஐயாயிரம் மக்கள் முன்னிலையில்
# அமிர் - நவம் மோதல்!

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிருவர் பகிரங்கமாக மோதிக்கொண்ட போது அங்கு கூடியிருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கட்டுப்பாட்டுடன் அமைதியாக இருந்ததைப் பாராட்டாமலிருக்க முடியாது.

கருத்துமோதலில் யாருக்கு வெற்றியென்று தீர்ப்புச்சொல்ல முடியாவிட்டாலும், பொதுமக்களின் கண்ணியத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் வெற்றி கிடைத்திருக்கிறதென்று சொல்லலாம்.

நேற்று முன்தினமிரவு வேலணை புளியங்கூடல் அம்மன் கோவில் முன்றலில் தமிழரசுக்கட்சி செயலாளர் திரு. அ. அமிதலிங்கத்துக்கும், தமிழர் சுயாட்சிக்கழகத்தலைவர் திரு. வ. நவரத்தினத்துக்குமிடையில் 'சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம்' அடையாள அட்டைமசோதா' ஆகிய இருவிஷயங்கள் குறித்து நடந்த பகிரங்கவிவாதத்தின்போது திரண்டிருந்த தமிழர் கூட்டம். தலைவர்களின் கருத்தரங்கு சிறப்புற நடக்க, நடந்து கொண்ட முறையைத் தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

வடபகுதி மக்களெல்லோரினதும் கவனத்தை ஈர்த்திருந்த இந்த விவாதத்தின் போது 'திடீர் திடீர்' நிகழ்ச்சிகள் நடக்கலாம் என்றும் கருத்து மோதலின்போது வேறு மோதல்களும் ஏற்படலாமென்றும் எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றம் தான்.

திரு. வி நவரத்தினம் சரியாக மாலை 6-15 மணிக்கு தனதுமனைவிமகன்மகளுடன் அம்மன் கோவிலுக்குமுன் பாகக் காரில் வந்து இறங்கினார். ''யாழ்ப்பாணத்திலிருந்துவிவாத அரங்குக்குக்கு வருவதற்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமா என்று பொலிசார் கேட்டனர். வேண்டாமென்றுவிட்டேன் என்று தனக்கே உரியவழக்கமான சிரிப்புடன் என்னிடம் கூறினார்.

திரு. நவரத்தினம்வந்து சேர்ந்த 20 நிமிட நேரத்தில் திரு அ. அமிர்தலிங்கம் வந்து சேர்ந்தார். இவ...

...னம் அவர்களே... திருமதி நவரத்தினம் அவர்களே... இப்படியாக அமிர் தனது பேச்சை ஆரம்பித்தார்.

ஆனால் கரவொலி மட்டும் இல்லை; ஆம், கைதட்டக் கூடாது என்பது ஒரு நிபந்தனை.

அதிமுக்கியமான இரு பிரச்னைகளைப்பற்றி எங்கள் கருத்துக்களை விளக்க வந்திருக்கிறேம். ஆனால் உங்களை சமீபத்தில் வைத்து ஆர்வம் காணும் உங்கள் வதனங்களை பார்த்து, துடிப்புகளை உணர்ந்து புரிந்துபேசுவதற்குவாய்ப்பில்லாதது கவலையளிக்கிறது. இந்தச் சட்டம் தமிழரைப் பொறுத்ரையில் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தச்சட்டங்களினால் நான் சார்ந்த தமிழரசுக் கட்சிக்குள்ளேயே சிறு பிளவை ஏற்படுத்தியது என்று குறிப்பிடட திரு அமிர்தலிங்கம் தனது பேச்சைச் தொடர்ந்தார்:-

னேம்: 1967ம் ஆண்டு கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்சட்டத்தில் இந்த மூன்று அம்சங்களும் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நாம்ஆதரித்தோம்.

விருப்பத்துக்குமாருக யாருமே வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட மாட்டார்கள.

### அடையாளஅட்டை எமக்கு பாதுகாப்பு

அடையாள அட்டை யசோதா பற்றி 'அமிர்' அடுத்துப்பேசினார். அவர் பேசுகையில் சொன்னார்:

'அடையாள அட்டை தமிழ்பேசும் இனத்துக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியதொன்று. அதனாலேயேநாம் அதனை ஆதரித்தோம். தமிழர்களாயிருந்தால் கண்டவர்களையெல்லாம் கள்ளத் தோணிஎன்று கைதுசெய்து. துன்புறுத்தும் நிலையை இந்த...

...திரி ஒப்பந்தத்தை நாம் ஆதரிக்கக் கூடாதென்றும் அதனை ஆதரித்தால் நாம் மிகப்பெரிய துரோகத்தைச் செய்தவர்களாவோம் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டினேன்.

### நீங்கள் எவ்வளவு? நாங்கள் எவ்வளவு

ஒன்பதே முக்கால் லட்சம் மலையகமக்கள் இருக்கிறார்கள். இதில் நீங்கள் எவ்வளவு பேரை எடுக்கிறீர்கள்? நாங்கள் எவ்வளவு? இது தான் ஒப்பந்தம் ஐந்தேகால் லடசம்பேரை இந்தியா எடுக்கவேண்டும், 3 லடசம் பேரை நாங்கள் வைத்திருப்போம். மிகுதி ஒன்றரை லடசம் பேரைப் பற்றிக் கதையில்லை. அதுபற்றி பிற்காலத்தில் கதைப்போம் என்று விட்டுவிட்டார்கள், இந்தியப் பிரஜாவுரிமைக்கு போதுமான பேர் விண்ணப்பிக்காமல், இலங்கைப் பிர...

# பலத்த பொலிஸ் பாதுகாப்புடன்
# நடந்த பகிரங்க விவாதம்

### ஏன் ஆதரித்தோம்

ஏன் இந்த இரு சடடங்களையும் தமிழரசுக் கடசி ஆதரித்தது? அதனால் தமிழருக்கு எந்தவித பாதகமும் வராது என்பதனை எனது பேச்சில் விளக்குகின்றேன். அரை நூற்றாண்டு காலமாக இலங்கை- இந்திய ஒப்பந்த அமுல் சடடம் இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்னையாக இருந்துவந்துள்ளது.

''1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதிஇலங்கை சுதந்திரம் பெற்றபின்பு அரசாங்கம் 3 முக்கிய சடடங்களை நிறைவேற்றியது.

இங்கைப் பிரஜாவுரிமைச்சடடம். குடியேற்ற வெளியேற்றச் சடடம் இந்திய-பாகிஸ்தான் பிரஜாவுரிமைச்சடடம் ஆகியனவே இந்த மூன்று சடடங்களாகும் இந்தச்சடடங்கள் தமிழர்களைப் பொறுத்தவரையில் பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது ...

அடையாள அட்டை மசோதா நீக்குகிறது. காசு தேவைப்படுகிற போதெல்லாம் பொலிஸ் உத்தியோகத்தர் கள்ளத்தோணியென்று கைதுசெய்து பணம் பறிக்கிறார்கள அடையாள அட்டை ஒன்றிருந்தால். அதனை அவர்களிடம் காட்டி உண்மை நிலையை உணர்த்திவிடலாம்'

கார்ச் சாரதி லைசென்ஸ் ஒன்றை வைத்திருப்பது போல், இதனையும் நாம் வைத்திருக்கலாம், சில சமயம் லைசென்ஸைவிட்டுவிடடு வந்தால், பின்னர் கொண்டு வந்து காடடுவதாகக் கூறுவதுபோல் இதனையும் பின்னர் வந்து காடடலாம்

வவனியா, கிளிநொச்சியிலுள்ள பலர் பொலிஸாரால் கள்ளத்தோணி என்று கைது செய்து பல கஷ்டத்துக்குள்ளாகின்றனர் இப்படியான தொரு அடையாள அடடை இருந்தால் அதனை அவர்களிடம்காடடி விடுதலைபெற்றுக்கொண்டு...ம்.

ஜாவுரிமைக்கே கூடுதலானவர்கள் விண்ணப்பித்தால், இலங்கை அரசாங்கம் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தப்படி 3 லடசம் மக்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொண்டு, ஏனையவர்களுக்கு ஒரு படடியல் தயாரித்து. இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படடு அவர்களை கப்பலேற்றி இந்தியகவுக்கு கடடாய நாடுகடத்த வழி செய்யும், இந்திய அரசாங்கம் ஐந்தேகால் லடசம் மக்களை இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களாக பதிவுசெய்தால்தான் இந்த மூன்று லடசம் மக்களையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யும்

### நாடுகடத்தப்படுவார்கள்

1967-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்த அமுல் சடடத்திலுள்ள விதியொன்றில் ...

கையெழுத்தைப் போட்டு விட்டார்கள் என்று கூறினார்.

'அமிர்' இந்தக் கட்டத்தில் குறுக்கிட்டு, இப்படியெல்லாம் தனிப்பட்ட முறையில் தாக்கக்கூடியதாகப் பேசுவது சரியல்ல என்றார்.

சொல்லாம், ஆனால் அவை பிரச்னைகளைக் கிளப்பிவிடும்' எனகூறிவிட்டு, ஆட்சிமன்றத்தில் திரு அமிர்தலிங்கம் ஒரு தடவை சொன்ன மாணிக்கவாசகர் பாடிய ''தந்ததும் உன்றன்னை, கொண்டதும் என்றன்னை — சங்கரா யார் கொலோ...

## மயங்கியநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி
### சந்நிதியில் காடையர் தாக்கினராம்

வல்வெட்டித்துறை, திங்கள் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் முன்பாகவுள்ள தண்ணீர்ப்பந்தல் வாசல் கட்டிடத்தில் இரவில் படுத்திருந்த ஒரு வரைகாடையர் சிலர் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கிவிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

தாக்கப்பட்டவர் அயலூர் வாசியென்றும், அறிவற்ற நிலையில் அவர்யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குஎடுத்து செல்லப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிகிறது. இதுசம்பந்தமாக இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

## உடலில் தீ மூட்டியவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய் புங்குடுதீவைச் சேர்ந்த 25 வயதான இளம் பெண் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி வெந்து மரணமானார்.

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை சேர்ந்த செல்லையா முத்துவேலு பெண் சரஸ்வதியே தீக்கு பலியானவராவர்.

ஒரு பிள்ளைக்கு தாயான இவர், கடந்த 7வருடங்களாக, மன நோயால் பாதிக்கப்பட்டிருந்தாரென்றும், சம்பவம் நடந்த தினம், மண்ணெண்ணெயை ஊற்றி தீமூட்டினார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

எரி காயங்களுடன் புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார்.

— —

### ஒய்வுபெறுகிறார்

யாழ்ப்பாணம், செவ்வாய் சுங்க இலாகாவில் கடமையாற்றிய யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த லூயிஸ் விக்ரர் இம்மாதக் கடைசியுடன் ஒய்வு பெறுகிறார்.

இவர் இருபத்தேழுஆண்டுகளாக சுங்கஇலாகாவிலும் அதற்குமுன்னர் சிலஆண்டுகளாக உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவிலும் கடமையாற்றினார். யாழ்ப்பாணச் சுங்கக்காரியாலயத்திலேயே தனது சேவையனைத்வையும் தொடர்ந்து செய்ததுடன் அங்கு கடமையாற்றியும்பல் வேறு அதிகாரிகளினதும், உத்தியோகத்தினரதும் அன்பையும் நன்மதிப்பையும் இவர்பெற்றார். கிறிஸ்தவ, தேவாலயங்களுக்கு இவர் பல தொண்டுகளாற்றியதன் மூலம் கிறிஸ்தவ மதகுருமாரின் மதிப்பையும் பெற்றார்.

—

### கல்லூரி அதிபர் ஓய்வுபெறுகிறார்

உரும்பராய், செவ்வாய் உடும்பராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. வைத்திலிங்கம் மே மாதம் முதலாந் திகதியிலிருந்து ஓய்வு பெறுகிறார். இவர் 12 வருடங்களாக உரும்பராய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்துவருகிறார்.

உடுவில், திங்கள்

கலைஞர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் எந்த ஒரு அரசாங்கமும் அவர்களுக்கு மதிப்பளித்து கௌரவிக்க வேண்டும். எமது நாட்டில் ஈழத்துக் கலைஞர்களும், தாய் நாடான இந்தியக்கலைஞர்களும் ஒன்று சேர்ந்து தமிழ் இசைக்கலையை வளர்க்க அரசாங்கம் தடைவிதித்துள்ளது. கலையில்கூட தமிழர்களை முன்னேற அரசாங்கம் விடாது. அரசாங்கம் தடைவிதிக்கும் இந்நிலை உடனடியாக மாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டு மக்கள் தான்; அவர்களும் மனிதர்கள் தானென்பதுஉண்மையே அவர்கள் தமக்கெனச் சில கொள்கைகளையும் பின்பற்றுவார்களாக இருக்கலாம். அவர்கள் யாருக்கு, எந்தக்கட்சிக்கு வாக்களிக்கவேண்டுமென்றுயாரும்வற்புறுத்த முடியாது வற்புறுத்தவும் கூடாது. தேர்தலில் இரகசியமாகவே வாக்களிப்பு நடைபெறுவதால் யார் யாருக்கு எக்கட்சிக்கு வாக்களிக்கிறார்களென்பதை யாரும் தெரிந்து கொள்ளமுடியாது. முப்படையைச் சேர்ந்தவர்களும் பொலிசாரும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கவேண்டிய அரசாங்க ஊழியரும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருக்கவேண்டுமே தவிர எந்தக் கட்சிக்குமல்ல. இதே சமயம் இச்சேவைகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதிலும் திறமைக்கும் தகுதிக்கும் முக்கியத்துவம் கொடுத்துத் தெரிவு செய்தால் கட்சி அரசியல் பிரச்னை ஒருபோதும் தலைகாட்டாது. அரசியல் வாதிகளின் சிபார்சில் எந்த உத்தியோகமும் பதவியும் எவருக்கும் கொடுப்பதில்லையென்ற நிரந்தரமான விதி ஒன்றிருந்தால் தான் இது சரிவரும். ஆனால் யார் இதற்கு ஒப்புக்கொள்வர்?

என்று தனக்கே உரியவழக்கமான சிரிப்புடன் என்னிடம் கூறினார்.

திரு. நவரத்தினம்வந்து சேர்ந்த 20 நிமிட நேரத்தில் திரு அ. அமிர்தலிங்கம் வந்து சேர்ந்தார். இவருடன் முன்னாள் உடுவில் எம்பி திரு வி தர்மலிங்கமும் கூடவே காரில் வந்திருந்தார்.

### சிரித்து சிரித்து பேசினார்கள்

நவரத்தினத்தின் காரும் அமிர்தலிங்கத்தின் காரும் அருகருகே நிற்க, தலைவர்களிருவரும் சில நிமிடநேரம் சிரித்து சிரித்துப் பேசிக்கொண்டனர்.

மேடையிலிருந்து திடீரென தலைவர்களுக்கு அழைப்பு வந்தது. அழைத்தவர்: தலைவர் திரு சி குருசாமிதான்.

மேடையை நோக்கி அமிர்தலிங்கம் நடந்து கொண்டு வந்த சமயம் மக்கள் கூட்டத்திலிருந்து ஒரு குரல் பெரிதாகஒலித்தது. 'வீரத் தளபதியே வருக! வருக! பொலிசார் அங்கு வந்ததும் எள்ளு விழுந்த சத்தம் கூட இல்லாது அமைதி நிலவியது.

தலைவர்களிருவரும் மேடையில் சென்று அமர்ந்தனர்; அவ்விரு தலைவர்களையும் கூட்டத் தலைவரையும் தவிர மேடையில் வேறுயாரும் கிடையாது. 50 யார் தூரத்திற்கு அப்பால் மக்கள் திரண்டிருந்தனர்.

தலைவர்களும், பொதுமக்களும் விவாதம்முடியும்வரை அனுசரிக்க வேண்டிய விதிகளையும், நிபந்தனைகளையும் தலைவர் கூறிவிட்டு, திரு. அ அமிர்தலிங்கத்தை பேச அழைத்தார்.

### 'அமிர்' ஆரம்பித்தார்

அவைத் தலைவர் அவர்களே! நண்பர் நவரத்தி

[illegible]ாவுரிமைச்சட்டம் ஆகியனவே இந்த மூன்று சட்டங்களாகும். இந்தச்சட்டங்கள் தமிழர்களைப் பொறுத்தவரையில் பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது

### [பி]ரதிநிதிகளை இழந்தோம்

1949ம் ஆண்டு இலங்கை பாகிஸ்தான்பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது: திரு ஜி ஜி பொன்னம்பலம் இதனை ஆதரித்தார். ஆனால் அவரைச் சார்ந்திருந்த செல்வநாயகம், வன்னியசிங்கம் சிவபாலன் ஆகியோர் அந்தச்சட்டத்திற்கு எதிராக வாக்களித்து காங்கிரஸிலிருந்து வெளியேறினார்கள்.

1947ம் ஆண்டு மலையகப் பிரதிநிதிகள் 8பேர் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிமன்றத்தில் அங்கம் வகித்தனர். இலங்கை பாக், பிரஜாவுரிமைச் சட்டத்தின் பலனாக 1947ம் ஆண்டு 21 தமிழர் அங்கம் வகித்த 95 பேர் கொண்ட ஆட்சிமன்றத்தில் 1960 ஆண்டு 18 தமிழ் பிரதிநிதிகளே அங்கம் வகிக்கிற நிலை ஏற்பட்டது. அதுவும் பிரதிநிகள் சபையில் 151 அங்கத்தவர்களாக்கப்பட்டபோது தமிழர் பிரதிநித்துவம் குறைந்துவிட்டது. ஆனால் 1967ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை இந்தியஒப்பந்த அமுல் சட்டம் இப்படியானதொன்றல்ல.

1949ம் ஆண்டு ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் புதுடில்லியில் கைச்சாத்தான பின்னர் ஸ்ரீமாவோ அம்மையார் செனட்சபையில் இது சம்பந்தமாக ஓர் அறிக்கையைவெளியிட்டார் அந்த ஒப்பந்தத்தில் 3 அம்சங்களை முன்நிறுத்தி அதனை எதிர்த்தோம்

### சிறிதளவும் விலகவில்லை

1965ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம்தெரிவித்திருந்ததற்கிணங்கவே அதனை எதிர்த்தோம். மலையக மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந் நாட்டையே தாயகமாகக் கொண்டிருக்கிற மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென்றும், அங்கு செல்ல விரும்புவர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டமும் அளிக்கவேண்டும் என்று விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தோம்.

அந்நிலையிலிருந்து ஒரு சிறிதளவாவது நாம் விலகிக்கொள்ளவில்லை. கட்டாய நாடுகடத்தல், தனிவாக்காளர் இடாப்பு, விகிதாசாரத்துக்குஏற்ப குடியுரிமை ஆகிய மூன்று அம்சங்களும் ஒப்பந்தத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென வற்புறுத்தி

[illegible] செய்து பல கஷ்டத்துக்குளாகின்றனர் இப்படியானதொரு அடையாள அட்டை இருந்தால் அதனை அவர்களிடம்காட்டி விடுதலைபெற்றுக்கொண்டு[illegible]ம்.

அடையாள அ[illegible]ட்டை மசோதா சட்ட மூலம் முதலில் கொண்டுவரப்பட்ட

[illegible]

### நாடுகடத்தப்படுவார்கள்

1967-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்திலுள்ள விதியொன்றில் விமான மூலமாகவோ, கப்பல் மூலமாகவோ இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்படு

**ஈ. கே. ராஜகோபால்**

போது தமிழரைப் பாதிக்கக் கூடிய பல விதிகள இருந்தன. அவைகள எல்லாம் நீக்கப்பட்ட பின்னரே. அதனை நாம் ஆதரித்தோம், நாட்டின் சகலபகுதிகளிலும் இந்த அடையாள அட்டை ஒரே சமயத்தில் வழங்கப் படவேண்டுமென்ற திருத்தத்தைச் செய்தபின்னரே நாம் அதனை ஆதரிக்கச் சம்மதித்தோம்.

அடையாள அட்டைக்கு படம்பிடிக்கவேண்டிய செலவைக்கூட அரசாங்கம் தான் பொறுப்பேற்கும் என்று பிரதமர் கூறியிருக்கிறார். இதனால் நாம் இதுபற்றி பயப்படவேண்டியதொன்றுமில்லை.

இரவு 7-15 மணிக்கு பேச்சை ஆரம்பித்த திரு. 'அமிர்' சரியாக 8 மணிக்குத் தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

இதயடுத்து கோயில் பூசை நடந்ததால் பதினைந்து நிமிடநேரம் இடைவேளை விடப்பட்டது.

### நவம் ஆரம்பித்தார்

இரவு 8-15 மணிக்கு திரு வி நவரத்தினம் தமது பேச்சை ஆரம்பித்தார்.

'சபைத் தலைவர் அவர்களே! நண்பர் அமிர்தலிங்கம் அவர்களே...!...! இப்படிப்பேச்சை ஆரம்பித்த 'நவம்' 'தமிழரசிலிருந்து நான் பிரிந்து சென்றதற்கு காரணம் தனிப்பட்ட குரோதமல்ல' என்று கூறிக் கொண்டு வாதத்தைத் தொடர்ந்தார். 'தமிழ் பேசும் இனத்தை பாதிக்கின்ற, படுகுழிக்குள் தள்ளுகின்ற பயங்கரம் நிறைந்த இரு சட்டங்களை ஆதரித்து மிகப்பெரிய துரோகத்தை தமிழினத்துக்குச் செய்ய நான் விரும்பவில்லை. 1966ம் ஆண்டு நான் ஆஸ்பத்திரியில் சுகவீனமுற்றிருந்ததால் இந் சட்டங்களின் நகல் மசோதாக்களும் கிடைக்கவில்லை பின்னர் தான் படித்துப்பார்த்தேன் அவை தமிழினத்தை பாதிக்கக்கூடிய மிகப்பெரிய விஷயமென்பதை உணர்ந்தேன் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி அவர்களுக்கு இது பற்றி உடன் ஒரு கடிதம் அனுப்பினேன் சிறிமா-சாஸ்

வார்களென கூறப்படுகிறது விரும்பி இந்தியப் பிரஜாவுரிமைக்கு மனுப்பண்ணுகிற மக்களாக இருந்தால் அவர்களுக்கு இந்த விதி தேவையில்லையே!

### ஜி. ஜி.க்கு என்ன பதில்

'1949-ல் ஜி ஜி பொன்னம்பலம் இலங்கை-பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தை ஆதரித்தார். அதனை எதிர்த்து வாக்களித்து. அதற்காக அவர் தலைமையிலிருந்து விலகி தமிழரசுக்கட்சியை ஆரம்பிந்தவர்கள், இப்போது பொன்னம்பலம் ஆதரித்தது போன்ற ஒரு சட்டத்தை ஆதரித்து உள்ளார்கள். இதற்கு பொன்னம்பலத்துக்கு என்னபதில் சொல்வார்கள், தமிழரசார்?

(திரு. 'நவம்' பேசும்போது அடிக்கடி 'அன்றைய தமிழரசு, இன்றைய தமிழரசு' என்ற பதத்தைப் பாவித்துக் கொண்டிருந்தார்.

அவர் தொடர்ந்து கூறினார்:-

என்ன காரணத்துக்காக காங்கிரஸிலிருந்து செல்வநாயகம் போன்றோர் விலகி தமிரசுக்கட்சியை ஆரம்பித்தார்களோ, அதே காரணம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

1949-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் திகதி மருதானையில் தமிழரசுக்கட்சி அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டபோது 'செல்வா' சொன்னது இப்போதும் என் நினைவுகளில் நிற்கிறது. 'இலங்கை பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு எதிராகப் போராடுவதுதான் எமது நோக்கம்' என்றார். எதனை முன்வைத்து தமிழரசு ஆரம்பிக்கப்பட்டதோ அதே லட்சியம் காற்றில் பறக்கவிடப்பட்டு மலையகமக்களைப் பலியாக்கிவிட்டார்கள்.

### 'அமிர்' குறுக்கிட்டார்

திரு. நவரத்தினம் பேசிக் கொண்டிருந்த போது உணர்ச்சிவசப்பட்டு "சிறுபிள்ளைத்தனமாகக் கண்ணைத் திறந்துகொண்டு

னார். 'அமிர்' இந்தக் கட்டத்தில் குறுக்கிட்டு, இப்படியெல்லாம் தனிப்பட்ட முறையில் தாக்கக்கூடியதாகப் பேசுவது சரியல்ல என்றார்.

சபையிலும் சிறிது 'சலசலப்பு' ஏற்பட்டது. சில விநாடிகளே இது நீடித்தது.

### ஆரம்பமே கஷ்டம்

அடையாள அட்டை மசோதா பற்றி திரு. நவம் பேசுகையில் கூறியதாவது: அடையாள அட்டையைப் பதிவுசெய்யும்போதே கஷ்டம் ஆரம்பித்துவிடுகிறது. இந்த நாட்டுப் பிரஜை என்று சந்தேகப்பட்டால், அவர் தன்னை இந்நாட்டுப் பிரஜை என்று நிருபித்த பின்னரே பதிவுசெய்ய முடியும்.

ஒருவர் போகும்போது, பொலிசார் அவரிடம் அடையாள அட்டையைக் காட்டும்படி கேட்கலாம். அப்படி அடையாள அட்டை இல்லாவிட்டால் பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச்செல்வார்கள். அங்கு அடுத்த நாள் அடையாளஅட்டையைக் கொண்டுவரும்படி கூறுவார்கள். அடுத்தநாள் அடையாள அட்டையுடன் செல்லாவிட்டால், அவரை கொம்பனித்தெரு முகாமுக்கு அனுப்பி வைப்பார்கள். இந்நாட்டுப் பிரஜை என்று நிரூபித்து வெளியே வர இரண்டுமாதமாகும். அதற்குள் எத்தனை எலும்பு மிஞ்சியிருக்குமோ?

அடையாள அட்டை மசோதாவில் 27-வது ஷரத்தும் 2-வது ஷரத்தும் இரட்டைக்குழல் துப்பாக்கி போன்றவை ஒரு ஷரத்தை விட்டுவிட்டு மற்ற ஷரத்தை நீக்கினாலும் பயனில்லை. இருக்கிற ஒரு ஷரத்தே மற்றதனுடைய வேலையையும் செய்யும்.

### தந்ததும் உன்றன்னை . . .

திரு. வி. நவரத்தினம் இறுதியாகத் தனது பேச்சை முடிககும்போது "உணர்ச்சி வசப்பட்டு இங்கு இன்னும் எத்தனையோ விஷங்களைச் எனகூறிவிட்டு, ஆட்சிமன்றத்தில் திரு அமிர்தலிங்கம் ஒரு தடவை சொன்ன மாணிக்கவாசகர் பாடிய "தந்ததும் உன்றன்னை, கொண்டதும் என்றன்னை — சங்கரா யார் கொலோ சதுரர்......" என்ற திருவாசகத்தைக் குறிப்பிட்டு "டட்லி எங்களுக்குத் தந்தது எதுவுமில்லை; ஆனால் நாங்கள் எமது உரிமைகள் பலவற்றையும் கொடுத்துவிட்டோம்" என்று கூறினார்

### நாம் சிறு பிள்ளைகளா?

அடுத்து திரு. அமிர், நவத்தின் பேச்சுக்கு பதிலளித்துப்பேசினார்.

திரு. நவரத்தினம் தமது பேச்சில் தமிழரசுக்கட்சியினரை "சிறுபிள்ளைகள்" என்று குறிப்பிட்டதற்கு பேச்சின் ஆரம்பத்தில் பதிலளித்துப்பேசினார்

"எழுபத்திரண்டு வயதான, ராணி அப்புக்காத்தான, கிடைக்கவிருந்த நீதியரசர் பதவியையே உதறித்தள்ளி, பெரிய இயக்கத்தையும், தமிழினத்தையும் வழிநடாத்திவரும் தந்தை செல்வநாயகம் சிறுபிள்ளையா? ராணி அப்புக்காத்தாகவும், சட்டமேதையாகவும் அமைச்சராகவுமிருந்த திரு. எஸ். திருச்செல்வம் சிறுபிள்ளையா? நாமெல்லாம் சிறுபிள்ளையா?" என்று உணர்ச்சி வசப்பட்டு பேசினார்.

"குழந்தைப் பிள்ளைகள் நடுச்சாமத்தில் எழுந்து நின்றுகொண்டு பயத்தினால் அழுவார்கள். பெற்றோர்களும் பேயோ, பிசாசோ என்று பயந்து குழந்தை அழுது விட்டதே என்று வீட்டை விட்டு ஓடிச்சென்று விடலாமா?" என்று கூறிக் கொண்டு தமது பேச்சை முடித்தார்.

இந்த விவாதத்தில் வெற்றி தோல்வி ஒருபுறமிருக்க, மேற்கண்ட இரு சட்டங்களும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பூச்சாண்டிகாட்டும் பயங்கரம் நிறைந்தவையா இல்லையா என்ற சந்தேகம் தெளிவாகி விட்டது என்று கூறலாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# அடுத்தமுறையும் இலங்கையில் ஒரு தேசிய அரசு அமையுமா?

டட்லிசேனநாயக்காவைப் பிரதமராக கொண்டதேசிய அரசாங்கம் மார்ச் மாதம் 25ம் திகதியுடன் ஐந்து ஆண்டு காலத்தை பூர்த்தி செய்தமை இலங்கை வாழ் மக்கள் பெருமைப்படக் கூடிய செயலாகும் 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு' எனும் பழமொழிக்கு இணங்க, பல கட்சிகளையும் தனது ஒரே குடையின் கீழ் ஒன்றுசேர்த்து 'தேசிய அரசாங்கம்' எனும் பெயர் கொண்டமையினால் தான் இன்று இருக்கும் அரசாங்கம் மக்களின் மதிப்பைப்பெற்றுள்ளது. ஆயினும், சிலர் சேசிய அரசாங்கத்தைக் குறை கூறுவதை நாம் பார்க்கக் கூடியதாகவும் உள்ளது. தேசிய அரசாங்கம் தமிழர்களுக்கு ஒரு சில குறைகள் விட்டிருக்கலாம் ஆயினும் அவ் வரசாங்கம் செய்த நன்மைகளுடன் ஒப்பிடும்போது அவை பாரதூரமானவையல்ல.

அடுத்த பொதுத் தேர்தலின் போதும், எக் கட்சி பதவி ஏற்கினும் 'தேசிய அரசாங்கம்' ஒன்று ஏற்படாவிட்டால் நாடு பின் தங்கிவிடும், எதிர்க்கட்சி ஒன்று இருப்பது நாட்டுக்கு ஜனநாயக முறைப்படி நல்லதுதான். ஆனால் அவை ஜனநாயக முறைப்படி இயங்க வேண்டும். அரசாங்கம் நல்லவற்றை நாட்டு மக்களுக்குச் செய்யினும் அதை எதிர்க் கட்சி என்ற முறையில் எதிர்ப்பதுஜனநாயகமா? அரசாங்கம் பிழைகள் செய்யும் பொழுதும் அதை தட்டிக் கேட்க எதிர்க்கட்சி முன்வர வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் தலைதூக்கும்.

பலகொள்கைகளையுடைய பல கட்சிகளை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள தேசிய அரசாங்கத்தில் பலமதத்தவர்களும், பல இனத்தவர்களும், பல சாதியினரும் ஒருங்கே சேர்ந்ததினால் தான் தேதிய அரசாங்கம் இன்று நாட்டில் மதிப்பு பெற்றுள்ளது. எக்கட்சி பதவி ஏற்பினும் ஆட்சிமன்றத்தில் பல கட்சிகளைக் கொண்டதேசிய அரசாங்கமும், ஓர் பலமான எதிர்க்கட்சியும் அமைய வேண்டும். அடுத்த பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கடசியோ ருக்கியதேசியக் கட்சியோ அரசாங்கத்தை அமைக்கக்கூடியவாய்ப்பை பெற்றாலும், மற்றைய கடசிகளையும் (தமிழ், சிங்கள கடசிகளையும்) ஒன்றுசேர்த்து ஒரு தேசிய அரசாங்கத்தை உண்டாக்க வேண்டும்.

அப்படியாக ஒரு தேசிய அரசாங்கம் அமைக்க இலங்கையின் இரு பெரும் சிங்கள கடசிகள் அழைக்கும் பொழுது, எமது தமிழ்க் கடசிகள் யாருடன் என்ற பிரச்னை எழுகின்றது.

பெரும் பான்மை மக்களாகிய சிங்கள இனத்தவர்களுடன் சிறுபான்மை இனத்தவர்களாகிய தமிழர்கள் ஒன்று சேருவதே சிறந்த வழியெனப் பலர் கூறுவதை நாம் கேடகிறோம். ஆகவே தமிழ்க்கட்சிகள் அடுத்த முறை அரசாங்கம் அமைக்கவிருக்கும் கட்சியுடன் சேர்ந்து நாட்டையும், தமிழ் மக்களையும் முன்னேற்ற வேண்டும். ஆகவே எமது தமிழ் கடசிகள் அடுத்த அரசாங்கத்துடன் ஒன்று படுவார்கள் என்று நம்புகின்றோம். இந்திய தி.மு.க- காங்கிரஸ் ஒத்துழைப்பு இதற்கு ஓர் உதாரணம்.

ஆகவே நாம் விரும்புவது அடுத்த முறையும் இலங்கையில் பல கடசிகளை கொண்ட ஓர் தேசிய அரசாங்கம் உருவாக வேண்டும் அதில் பல இன மக்களும், பல ஜாதியினரும், அங்கத்தவர்களாகயிருந்து நாட்டை ஆளவேண்டும் என்பதே.

சிங்க்லயர்பீற்றர்
அம்பாறை


## தேவை

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஏழாலை. குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன் ஆகிய இடங்களுக்கு பத்திரிகை விநியோகம் செய்யப் பிணைப்பணம் கட்டக்கூடிய சொந்தச் சைககிள் வைத்திருககும் பையன் ஒருவர் உடன் தேவை. நேரில் வரவும்.

நிர்வாகி.

2017 ஈழநாடு, யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org